KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன் தோறும் வெளிவரும்

வருஷ சந்தா
உள் நடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

Vol 2.] 1929 ௵ பிப்ரவரி ௴ 28௳ [No. 9.

OFFICE OF THE R... 1929 ...OKS MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 161
2. அப்பர்
E.N. தணிகாசலமுதலியார் B. A., B. L. 163
3. ஏமாங்கதத் திளவரசன் (A Novel)
T. N. சேஷாசலம் B. A., B. L. 165
4. சீர்திருத்தம், (By Emerson.)
K. இராஜகோபாலன் 167
5. வில்லிபாரத விளக்கம்
T. S. நடராஜப்பிள்ளை B.A., B.L. 169
6. தமிழ்ப் பாடம் 171
7. சிலப்பதிகாரமும் மணிமேகலையும்
A. ஸ்ரீநிவாஸராகவன் B.A. Hons. 173
8. கம்பராமாயணம்
T. N. சேஷாசலம் B.A., B.L. 174
9. வர்த்தமானம் 179

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமானாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினாங் தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

கலா நிலயம்.

கலைகளே கதி.

II

189044

தனித்தனிச் சுகமும் செல்வமும் மற்றுள நலங்களும் இங்குஒருவருக்கும் அங்கு ஒருவருக்கும் எய்தியிருப்பதாகக் காணலாமெனினும், பொதுஜன வாழ்க்கை இந்நாட்டிலும் இங்கிலாந்திலும் ஒரு திறத்ததாய்க் கஷ்ட நஷ்டங்களும் பாவமும் துன்பமும் சற்றேறக்குறைய ஒருபடியாயிருக்கின்றனவென்பதை மறவேமாயின் மற்றினி யுரைப்பதெல்லாம் எளிதிற்றொடர்ந்துணரலாம். தாமஸ் கார்லைல் ஓரிடத்தில்,

"இங்கிலாந்தில் இந்தக் கைத்தொழில் மிகுதியும் அதனால்கொழித்த செல்வமும் இதுவரையில் யாரையும் பணக்கார ராக்கியதில்லை. அந்தப் பணம் பெரும்மாயை. யாருக்கும் இன்னும் அது சொந்தமன்று. யாரை அது பணக்கார ராக்கியது என்று கேளுங்கள்? முன்னூறுநூறாய்ச் செலவுசெய்தவிடத்தில் இப்பொழுது ஆயிரம் ஆயிரமாய்ச் செலவுசெய்யலாம், உண்மையே; ஆனால் அதைக்கொண்டு நல்லதொன்றும் நாம் வாங்க இயலாது. ஏழைகளாகட்டும் பணக்காரர்களாகட்டும், மேன்மையாய மிதச்செலவும் நிறைந்த பொருளும் உடையவரா யிருக்கவில்லை. சோம்பேறிய சிற்றின்பமும் அற்பமாய குறைவும் சோர்வுமே மாறிமாறி அவ்விருவரிடத்தேயுந் தோன்றக் காண்கின்றோம். வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்களெல்லாம் இப்பொழுது நிறைந்திருக்கலாம். ஆனால் அவைகளுக்கிடையே நல்வாழ்வு வாழத்தான் மறந்துபோய் விட்டோம். இந்தச் செல்வமெல்லாம் ஜாலக் காட்சி. நம்மவரில் யாரும் அதை இன்னும் தீண்டவும் முடியாது. இச்செல்வத்தினால் வாஸ்தவத்தில் முன்னிலும் நன்மை பெற்றோம் என்ற உணர்ச்சி யாருக்காவது ஏற்பட்டிருந்தால்—நல்லது, அவர் பேரையும் விலாசத்தையும் எமக்குச் சொல்லட்டும்".

என்று கேட்டிருக்கின்றார். பேரும் விலாசமும் தெரிவிக்க வல்லார் எங்குளர்! இவ்விஷயங்களைச் சற்று விரிவாக எம் 'விலாசம் வேண்டும்' என்னுந் தலையங்கத்தில் (வால். 1. பக்கம் 441) வரைந்துள்ளோம்.

செல்வத்தின் செய்தி அவ்வாறாக, இச்செல்வமும் சிறப்பும் எய்துதற்கு ஆதாரமா யிருக்கின்றதென அரசியல் முறைகளை முக்கியமாகக்கொண்டு ஊடாடுவதன் தன்மையும், அதனால் விளைவதற்குரிய தீங்குகளின் அளவும் ஸ்ரீ அரவிந்தரின் மெய்யுரைகளை முன்னிட்டு முன் "அரசியலும் அரவிந்தரும்" என்ற தலைப்போடு தொடர்ந்த ஏழு தலையங்கங்களில் (வால்யூம் 1. பக்கம் 781, 801, 821, 841, 861, 881, 901) காட்டப் பெற்றிருக்கின்றன. அதனில், நாட்டுநலம் என்ற கருத்தோடு பொதுஜனக் கருமங்களில் ஈடுபடுவோர் சிலர்க்கு இடையேநிகழ்கின்ற மாறுதல்களை நாம் காட்டியிருப்பது இந்நாள் உலக அனுபவத்தோடு ஒக்க முடிந்ததெனக் கொள்ளல் அரிதன்று.

189044 N28KN 1.3.29

நுண்ணறிவுடைய ஸ்ரீ அரவிந்தர் அவைகளை ஊகித்து உரைத்திருக்கின்ற திறத்தையும், இன்னவாறு நிகழ்கின்ற மானுடஇயற்கையைக் கையாண்ட ஷேக்ஸ்பியரின் பெருமையையும் மறக்கத்தான் இயலுமென நினைப்பாரும் இலரென்றே எண்ணுகின்றோம். அரசியல் முறைகளாலும், அவை எவையே யாயினும், அது பற்றிச் செய்யும் வாதங்களாலும் எவருக்கும் எவ்வித நன்மையும் இயற்றிவைக்க ஒண்ணாதென்று ஒரு தலையாய் அப்பெரியார் உரைத்திருப்பதை உறுதியாகக் கொள்ளல் வேண்டும்.

இதன்மேல், நமது கவிஞர்பெருமான் ஸ்ரீ இரவீந்திரநாதரின் உள்ளக்கிடக்கையை உணருமாறு நாம் “சொல்வோரிற் கேட்பவர் அருமை” என வரைந்த ஏழு தலையங்கங்களையும் நோக்குதல் நலமாம் (வால்யூம் 1. பக்கம், 521, 541, 561, 581, 601, 621, 641). அரசியலை முன்னிட்டுப் பொதுஜனக் கூட்டுறவு இயக்கங்களால், ஸ்ரீ அரவிந்தர் கொள்கைக்கு மாறாக, வர்த்தகம்பெருகித் தனதாயநிலை நேர்மைப்பட்டு நாட்டிலே செல்வம் பெருகஇயலும் எனக்கொண்டு, பிறகு கார்லைல்உரையைப் பொய்ப்படுத்தும்வண்ணம் அச்செல்வத்தால் நாட்டினர் சுகம் பெறுவதாக மதித்தாலும், இரவீந்திரர், “அதுவல்ல வாழ்வு. வாழ்வென்பது உனது உடைமையாலும் புறத்தினின்று உனக்கொன்று உறுவிக்கின்ற தன்மையாலும் நேர்வதன்று. நித்தியத்தின் ஹிருதயத்தில் வாழ்கின்றவர்களே வாய்மையாக வாழ்கின்றவர். ஆதலால் மற்றவெல்லாம் பொய்வாழ்விற்கு அடிகோலிவைக்கும் சாதனங்களே. பொய்யால் துன்பமன்றிப் பெறுவது வேறியாதோ” எனக் காட்டுகின்றார். அவரது கருத்துக்களையும், அவைகளுக்கு ஆதாரமாய் அவர் காட்டுகின்றவைகளையும் மீண்டுமிங்கு எடுத்தெழுதுதல் மிகை. இதனோடு, “கடவுளிற்கு வழிவேண்டும்” என்றுரைத்த காந்தியடிகளின் மொழியைப்பற்றி நாம் ஓர் தலையங்கத்தில் (வால்யூம் 1. பக்கம் 261.) விளக்கியிருப்பதையும் ஓதி யுணர்தல் நலமாம்.

இஃதிவ்வாறாயின் இந்நாள் நிகழ்கின்ற எதனை நாம் நலத்திற்கு வித்தாய நாட்டுத்தொண்டு என்று ஏற்பது! பொதுஜன நன்மைக்கு முயல்கின்ற நோக்கங்கள் பாராட்டத் தகுந்தனவேயாயினும் அந்நோக்கத்தை நடத்திவைக்கும் முறைகள் எவையும் இந்நாள் நிகழ்கின்றபடி நலமுடைத்தாய்க் காணவில்லையே. இதுகாறும் அம்முறைகளால் யாவர்க்கும் எந்நாட்டிலும் எக்காலத்திலும் தீதொழிய நன்மைகள் விளைந்ததுமில்லையே. நம்முடைய அனுபவமே இவ்வுரையை மெய்யென நாட்டுவது மல்லாது, அரவிந்தர் இரவீந்திரநாதர் கார்லைல் எமர்ஸன் அனைய பேரறிஞர்தம் உறுதிவாய்மையும் இவைகளுக்குக் கரிகூறி நிற்கின்றன.

நாட்டுத்தொண்டு நலத்தொண்டு முதலியன ஆற்றுவோர்தம் முறையும் பயனும் இது. “ஆயினும், இவ்வகைத் தொண்டுகளெல்லாம் அரசியல் நெறியில் விவகரிக்கும் முறைகளுக்குள் அடங்கிவிடுவதில்லையே. உயிரற்ற பண்டைநாட் பழக்கங்களின் அடிமையினின்று நம்மை விடுவித்துக்கொள்ள முயல்கின்ற முயற்சி நலத்தொண்டின்பாற் படாதோ. தீண்டாமை, இளவயதிற் கலியாணம், சாதிவேற்றுமை முதலியவைகளை விலக்குதற்குரியன செய்தல் நலமன்றோ” என்ற ஐயமுடன் பின்னுஞ்சிலர் நம்மை வினவலாம். பண்டைய வழக்கங்களும், தீண்டாமை சாதிபேதம் ஆய இவை, இருந்து கடைபிடிப்பதற் கொத்தனவோ, மற்றுஅவை தொலைந்தொழிய வேண்டியனவோ, என்னும் கட்சிவாதத்தில் நாம் தலையிடவில்லை. ஆனால், பழையன வென்று இந்நாள் நாம் பழிக்கின்ற செய்கையின் தன்மையை, “ஸ்ரீ கிருஷ்ணாஜியின் பிரிவுமொழி” என்ற தலையங்கத்தில் (வால்யூம் 1. பக்கம் 201) சிறிது காட்டியிருக்கின்றோம். பழையன கழியாததால் நாம் வருந்துகின்றோம் என்று எண்ணுவதைக்காட்டினும் புதியனசில புகுந்துளதால் வருத்தங்கள் நேர்ந்திருக்கலாம் என்று எண்ணுவது மமையும். தீண்டாமை முதலியன தீமையே என்று கொண்டாலும் அவைகளைவிலக்கக்கருதுகின்றமுறைகள், தோலளவே தொடுகின்ற பான்மையனவாதலால் பயனற்று அவை தீர்வதை, “விலகவோ விலக்கவோ” என்னும் எமது தலையங்கத்தில் காணலாம் (வால்யூம் 1. பக்கம் 961). “முப்பிழை” என்னும் தலையங்கம் (வால். 1. பக். 501) இத்தகைய விஷயங்களில் மாந்தர்மனம் விபரீதமாய் விவகரிக்கின்ற தன்மையைக்காட்டும். “கூண்டை உடைத்தால் குருவி வருமோ” என்னுந் தலையங்கத்தையும் நோக்கல்வேண்டும் (வால் 1. பக். 721).

இனி, ‘உரிமைத் தொண்டை’க் கலாநிலயம் மறுப்பது ஏன் என வினவுகின்றார். கலாநிலயம் உரிமையின் உயர்வையேனும் அதனை அடையவேண்டிய அவசியத்தையேனும் மறுக்கின்றதில்லை. மேன்மேலும் அடிமையாகின்ற ஊக்கத்தை உரிமை என்று அழைப்பதற்குக் கலாநிலயம் எவ்வாறு இணங்கும்! கூறியது கூற நாம் விரும்பாததால் இவ்விஷயங்களை எடுத்துக் காட்டியிருக்கின்ற தலையங்கங்களை மாத்திரம் குறிப்போம். உரிமை என்று நமக்கு ஒன்று உளதென்னும் நினைவே பெரும்பாலும் பலவித தீமைகளுக்குக் காரணமா யிருக்கின்றன. உரிமையெனின் நமது கருமத்தைச் செய்யவேண்டிய உரிமை ஒன்றே நமக்குளது. அவ்வுரிமையை யாவரும் கவர்ந்தகல முடியாது. கேட்டு வாங்க வேண்டியது மொன்றன்றது. தனக்கொரு தீங்கு பிறரால் நேராது, என்னும் நிரந்தர நினைவே உண்மையான உரிமையின் பெருமையாம். உரிமைத்தொண்டு என்னும் பெயரால் நடைபெறுகின்ற முறைகளெல்லாம் இந்நினைவிற்கு நேர்மாறாக விவகரிப்பதைப் பார்க்கின்றோம். ஆகையால் அம்முறைகளைக் கொண்டாடக் கலாநிலயம் மனங்கொண்டிலது. “சொல்லால் முழக்கிலோ சுகமில்லை” (வால் 1. பக். 301) என்னுந் தலையங்கத்தில் மாதரார் உரிமை எனக் கருதுவதன் அமைதியின்மையையும், உரிமையின் பொய்மை (வால். 2, பக்கம் 41) என்ற தலையங்கத்தில் உரிமையின் உண்மை இலக்கணத்தையும் ஆராய்ந்திருக்கின்றோம்.

ஆதலால், கலாநிலயம், இக்காலத்தில் ஒருசிலர் தவிர பெரும்பகுதியோர் தொண்டாற்றுகின்ற நெறியினின்று சற்றே விலகிநிற்கின்றது. எனினும், இதனினும் பயனில்லை, அதனினும் பண்பில்லை என்று யாவற்றையும் கைவிதிர்த்து நம்பிக்கை துறந்த நிலையில் கையற்றுச் சோர்வதும் கலாநிலயத்தின் கருத்தன்று. இவ்வுலகத்தின்கண் எல்லாவித நன்மைகளும் கொழுந்தோடிப் படர்ந்து எல்லாரும் எங்கும் இன்புற்றிருக்கக் கொளுகொம்பா யமைபவல்லது கலையுணர்வுதான் ஆகும் என்று சாற்றுகின்றோம். கலைகள் பற்பலவாயினும் அவைகளுள் முதன்மையாய்க் காவியக்கலையைக் கருதுகின்றோம்.

நாம் நினைக்கும்வண்ணம் நலங்கள் யாவும் கலையுணர்வு சாதிப்பது எவ்வாற்றால் என்பதையும், ‘கற்றோரிற் பலர் இழிதகை நடத்தையராய் இருக்கின்றனரே’ என்று நமது நண்பர் கொண்டுள ஐயத்தின் தன்மையையும் இனி ஆராய்வோம். (தொடரும்)

OFFICE OF THE RE… 1929 MADRAS

அப்பர்.

3. அப்பர் சிவஸ்தல யாத்திரைகளைப்பற்றிய புராண வரலாறு.

2. தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள திருப்பதிகளுக்கு யாத்திரை.

150 பக்கத் தொடர்ச்சி

வாகீசர் விருத்தாசலம் விட்டுக் கீழ்த்திசையாய் நிவா என்னும் நதிக்கரையின்வழியாகச் சிதம்பரத்தை அடையலானார். இவர் மேற்குக் கோபுர வாசலில் வருமுன்னர், அவ்வூர் அடியார்கள்பலர் எதிர்கொண்டு, சிவமே நிலவிய திருவீதிகள்வழியாய்க் குளிர்ச்சியையும் அலங்காரங்களையும் கண்டு களிக்க ஏழு நிலைக் கோபுரத்தை முறையாகத் தொழ, திருநாவுக்கரசை நடராஜர் சன்னிதானத்திற்குக் கொண்டேகு வாராயினர் நாயனாரும் தலைமேல் இரண்டு கைகளையும் * கூப்பி ஆநந்தமழை கண்களிற் பொழியப் பூமியில் விழுந்து எழுந்து “பத்தனாய்ப் பாடமாட்டேன்” என்னும் திருநேரிசைப் பதிகங்கள் முதலாய்ப் பலதமிழ் மாலைகளைப் பாடினார்.

பின்னர்த் திருநாவுக்கரசு நாயனார் சிலநாள் சிதம்பரத்தில் கோயில்திருப்பணிகளைத் தன்னால் இயன்றவளவு ஆற்றி உழைவாரப் படையைக் கையிற் கொண்டவராய் “அன்னம் பாலிக்கும்” என்னும் திருக்குறுந்தொகை முதலிய பாடல்கள் பாடினர். அந்நாளில் சிதம்பரத்திற்கு ஒருமைலில் உள்ள திருவேட்களம் என்னும் மூங்கல்வனத்திற்குச் சென்று “வேட்களநன்னகரார்” பேரில் பதிகங்கள் பாடினார். அவற்றுள் திருக்குறுந்தொகையில் ஒன்றுளது. இப்பதிகம் சிவபெருமான், தன்னை வணங்குவோர் எப்படிப்பட்டவரானாலும் அவர்களுக்கு அருள் செய்யாமலிரார் என்னும் கருத்தமைந்த தாகும் †.

திருவேட்களம் தரிசித்த பின்னர் இதனின்று தெற்கே கொள்ளிடத்தின் வடகரையில்‡ காரைமேடு என்னும் இடத்திலிருந்த திருக்கழிப்பாலைக்கு அப்பர் எழுந்தருளினார். அவ்விடத்தில், “விடையுகந்தேறும் மணவாளநம்பி” யின் பாதம்பணிந்து அகப்பொருளிலக்கணத்தில் சிற்றின்ப ரூபத்தில் பே[illegible]விலக்கணத்தைப் பொருத்திக்காட்டும் “வனபவள வாய்திறந்து வானவர்க்கும் தானவனே யென்கிறாளால்” என்னும் திருப்பதிகம் பாடினார். இப்பதிகம் திருக்கோவையாருடன் ஒத்திட்டு வாசிக்கவேண்டிய தன்மை யமைந்தது. நாயகிவருந்தும் கைக்கிளையில் ¶ ஆண்பிள்ளைத்தன்மைமறந்து எக்கவியாயினும் பெண்பாலாய்ப் பாடுவது சாமான்யமான காரியமன்று. திண்டோளும், வெண்ணீறும், வெள்ளெருக்க நாண்மலரும், உத்தரீயமும், குங்குமத்திருமேனியும், நீலகண்டமும், இரும்பார்ந்த சூலமும் பழியிலாப்புகழும், பண்ணார்ந்த வீணையும், பெருந்தடங்கண் மூன்றும், மின்னும் குழை காதிரண்டும், புன்சடையும் கண்டுவக்கும் சிவகாமிஅம்மையாரும் எம்பெருமானை வர்ணித்து ஆநந்திப்பதில் திருநாவுக்கரசினும்அதிகமாய்ச்செய்ய முடியுமோஎன்ன யாவரும் எண்ணத்தக்க இப்பதிகம் போல் எடுத்துக்காட்டக் கூடியது எந்த இலக்கியத்திலுமில்லை.

இத்தலத்தில்இவர் திருவாய்மலர்ந்தருளிய தேவாரப் பதிகங்கள் ஐந்து * உள. அவற்றுள் இவர் பாடிய திருவிருத்தப் பதிகத்தில் ஏழுபாசுரங்கள் மறைந்தன. மாயக் குரம்பை நீங்க “வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே” என்னும் முடிவு கொண்ட பத்துப் பாசுரங்களமைந்த திருத்தாண்டகப் பதிகம் ஒன்று, “வழி வைத்தார்” என்று. தொகுத்துச் சுட்டியதை வகுத்துக் காட்டுவதுபோல், “நங்கையைப் பாகம் வைத்தார் ஞானத்தை நவில வைத்தார்” † என்றெடுத்த திருநேரிசைப் பதிகம் மற்றொன்று. இப்பதிகங்கள் முத்திநெறி காட்டும் பதிகங்களாம்.

* கையுந் தலைமிசை புனையஞ் சலியன
கண்ணும் பொழிமழை யொழியாதே
மெய்யுந் தரையின கரணங் களுமுட
னுருகும் பரிவின பேறெய்து
மெய்யுந் தலமிசை விழுமுன் பெழுதரு
மின்றாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநட மெதிர்கும் பிடுமவ
ரார்வம் பெருகுத லளவின்றால்
—பெரியபுராணம் 167.

† i கருப்பு வெஞ்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பொருப்பு வெஞ்சிலை யாற்புரம் செற்றவன்
விருப்பன் மேவிய வேட்களங் கைதொழு
திருப்ப னாகி லெனக்கிட ரில்லையே. (2)
ii வட்ட மாமதின் மூன்றுடை வல்லரண்
சுட்ட கொள்கைய ராயினுஞ் சூழ்ந்தவர்
துட்ட வல்வினை தீர்த்துக் குளிர்விக்கும்
சிட்டர் பொற்றிரு வேட்களச் செல்வரே. (4)
திருவேட்களம்-திருக்குறுந்தொகை

‡ திருக்கழிப்பாலை ஆலயம் முன்னிருந்த கட்டத்தை ஆறு கொண்டுபோய்விட்டபடியால், இப்போது அது சிவபுரியில் அமைந்திருக்கின்றது. சிவபுரி என்பது திருநெய்வாயில் என்னும் பேருடையது.

¶ இப்பாசுரங்களையும் நோக்குக:—
i வண்ணமும் வடிவும் சென்று கண்டிலள்
எண்ணி நாமங்க ளோத்தி நிறைந்திலள்
கண்ணு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
அண்ண லேயறி வானிவள் தன்மையே. (1)
ii மருந்து வானவ ருய்யநஞ் சுண்டுகந்
திருந்த வன்கழிப் பாலையுள் ளெம்பிரான்
திருந்து சேவடி சிந்தையுள் வைத்திவள்
பரிந்து ரைக்கிலு மென்சொற் பழிக்குமோ. (2)
iii மழலை தான்வரச் சொற்றெரி கின்றிலள்
குழலி னேர்மொழி கூறிய கேண்மினோ
அழகனே! கழிப்பாலை யெம் மண்ணலே!
இகழ்வ தோவெனை? என்றுகொ லென்னுமே (3)
திருக்கழிப்பாலை-திருக்குறுந் தொகை.

* திருக்கழிப்பாலை, பண் - காந்தாரம், திருக்கழிப்பாலை திருவிருத்தம், திருக்கழிப்பாலை - திருக்குறுந்தொகை! திருக்கழிப்பாலை - திருத்தாண்டகம், என்பன.

† திருஞானசம்பந்தர் பாசுரங்களை நோக்குக:—
(i) வெந்த குங்கிலி யப்புகை விம்மவே
கந்த நின்றுல வுங்கழிப் பாலையார்
அந்த மும்மள வும்மறி யாததோர்
சந்த மாலவர் மேவிய சாந்தமே... (1)
(ii) துன்னு மான்மறி யங்கையி லேந்தியூர்
கொள்வ னூரிடு வெண்டலை யிற்பலி
கள்வ னூருறை யுங்கழிப் பாலையை
உள்ளு வார்வினை யாயின வோயுமே. (6)

"மனைப்படப்பிற் கடற்கொழுந்து வளைசொரியும் கழிப்பாலை" ¶ யுள் சிலநாள் வைகி, திருச்சிற்றம்பல வரை நினைந்து $ "தினைத்தனை யாம்பொழுது மறந் துய்வனோ" என்னும் திருக்குறுந்தொகை பாடி மீண்டனர். பின்னர்த் தில்லையுள் "அரியானை அந்தணர் தம் சிந்தையானை" என்னும் பெரிய திருத் தாண்டகமும் "செஞ்சடைக் கற்றைமுற்றத் திளநிலா வெறிக்கும் சென்னி" என்னும் திருநேரிசைப் பதிகமும் பாடினார்.

திருநாவுக்கரசு நாயனார் தில்லையுட்பாடிய பதிகங்களி லெட்டுநமக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றுள் சிலவற்றைப்பற்றி முன்னமே ஆராய்ச்சியில் மொழியலாயிற்று. மற்றும் சிலவற்றைப்பற்றிய பின்அத்தியாயங்களிற் காணலாம். "கோயில்" என்றுகொண்டாடப்பட்ட அத்திருப்பதியில் பாடிய பாடல்கள் சில திருநாவுக்கரசுநாயனார் சரித்திர வரலாற்றை ஆராய இன்றியமையாக் கருவிகளா யிருக்கின்றன. பொதுவிற் கூறிய சில விஷயங்கள் இவர் பூர்வோத்திரத்திற்கும் பொருந்தும் *.

திருநாவுக்கரசு நாயனார் சிதம்பரத்தில் திருத்தொண்டு செய்துவருகையில், யுகமுடிவில் சமுத்திர வெள்ளத்தின்மேல் முழுகாமல் மிதந்த † சீர்காழி யென்னும் க்ஷேத்திரத்தில் உமாதேவியாரால் ஞானத்தைப் பாலுடன் ஊட்டவும், வேதரகசியங்கள்யாவும் தேவாரத்தால் ‡ வெளியிட்ட திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமியினுடைய அற்புதங்களைக் கேள்விப்பட்டார். அதனால் அவரைத் தரிசிக்க விரும்பி, * பன்னிரண்டு திருநாமங்கள் பெற்ற சீர்காழியை நோக்கிச் செல்வாராயினர். போகும்வழியில் (கொள்ளிடம் வடகரை மட்சாலை மார்க்கத்தில் திருக்கடம்பூர்$என்னும் மேலைக் கடம்பூருக்கு 8 மைலில் உள்ள) திருநாரையூர் என்னும் ஸ்தலம் பணிந்து பதிகங்கள் பாடினார். இப்பதியின்கண் பாடியவற்றுள் ஒரு திருக்குறுந்தொகைப் பதிகமும் ஒரு திருத்தாண்டகமும் உள. இத்திருக்குறுந்தொகை ஒருவித கேசாதிபாத வர்ணனையாய்த் தலைவி தலைவனைக்கண்டு † களித்தலாய்ப் பாடிய பத்துப் பாசுரங்கள் அமையப்பெற்றது. ஆறு சூடிய அழகில் ஆரம்பித்து இராவணன் பத்துத்தலைகளும் நசுங்கவைத்த தாள் பெருவிர லழகில் இப் பதிகம் முடியும்.

இத்திருக்குறுந்தொகையில் சற்குண இலக்கணத்தில் எடுத்துக் காட்டியது போல், அப்பர் இத்தலத்தின் திருத்தாண்டகத்தில் சிவபிரானை நிற்குண இலக்கணத்திலும்காட்டுகின்றனர். இதன்றியும் அவர், கடவுள் எப்பொருளிலும்‡ எத்தத்துவத்திலும் கலந்து நின்று அவ்வவ்வவற்றை ஒளிபிடச்செய்து யாவருக்கும் இன்பம் பயப்பிப்பதை "நாரையூர் நன்னகரிற் கண்டே னானே" என்று முடிக்கின்றார்.

¶ பருமா மணியும் பவளமுமுத் தும்பரந் துந்திவரை[லங்கும்
பொருமால் கரைமேற் றிரைகொணர்ந் தெற்றப்பொலிந்தி
கருமா மிடறுடைக் கண்டனெம் மான்கழிப் பாலையெந்தை
பெருமா னவனென்னை யாளுடை யானிப் பெரு நிலத்தே
—திருக்கழிப்பாலை- திருவிருத்தம் 2.

$ "பனைக்கை மும்மத வேழமுரித்தவன்" என்று எடுத்த திருக்குறுந்தொகை.

* அருந்துணையை யடியார்த மல்லல் தீர்க்கும்
அருமருந்தை யகன்ஞாலத் தகத்துட் டோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்க ளகத்தடக்கி மடவா ளோடும்
பொருந்தனைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க்கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.
—கோயில் பெரியதிருத்தாண்டகம். 5

† நிலையும் பெருமையு நீதியுஞ் சால வழகுடைத்தா
யலையும் பெருவெள்ளத் தன்று மிதந்தவித் தோணிபுரஞ்
சிலையின் றிரிபுர மூன்றெரித் தார்தங் கழுமலவர்
அலருங் கழலடி நாடொறு நந்தம்மை யாள்வனவே
—திருக்கழுமலம் - திருவிருத்தம். 6

‡ அருமறை ஞானசம் பந்த னந்தண்
சிரபுர நகருறை சிவ னடியை
பரவிய செந்தமிழ் பத்தும் வல்லார்
திருவொடு புகழ்மல்கு தேசினரே.
சம்பந்தர்—திருப்பிரமபுரம்-பண்-வியாழக்குறிஞ்சி 11

* விளங்கிய சீர்ப் பிரமனூர் வேணுபுரம்
புகலி வெங்குரு மேற்சோலை
வளங்கவரும் தோணிபுரம் பூந்தராய்
சிரபுரம் வண்புறவ மண்மேல்
களங்கமிலூர் சண்பை கமழ்காழி வயம்
கொச்சை கழுமல மென்றின்ன
விளங்குமா றன்னைப்பெற் றிமையவர்
தம்பகை யெறிவித் திறைவனூரே.
—சம்பந்தர் (திருச்சக்கரமாற்று - பண் - காந்தாரம்) 1

$ திருக்கடம்பூரைப்பற்றி யாதொன்றும் சேக்கிழார் கூறவில்லை பின் அத்தியாயத்தில் காண்க.

† என்பு பூண்டெரு தேறியி ளம்பிறை
மின்பு ரிந்த சடைமேல் விளங்குதல்
நன்ப கற்பலி தேரினு நாரையூர்
அன்ப னுக்கது வம்ம வழகிதே. 8

ii முரலுங் கின்னர மொந்தை முழங்கவே
இரவி னின்றெரி யாடலு நீடுலாம்
நரலும் வாரிநன் ஞரையூர் நம்பனுக்
கரவும் பூணுத லம்ம வழகிதே. 9
—திருநாரையூர் -திருக்குறுந்தொகை

‡ பிறவாது மிறவாதும் பெருகி னானைப்
பேய்பாட நடமாடும் பித்தன் றன்னை
மறவாத மனத்தகத்து மன்னி னானை
மலையானைக் கடலானை வனத்து ளானை
உறவானைப் பகையானை யுயிரா னானை
யுள்ளானைப் புறத்தானை யோசை யானை
நறவாரும் பூங்கொன்றை சூடி னானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே
—திருநாரையூர் - திருத்தாண்டகம், 6

இதுவரையில் இவ்வருடச் சந்தாவை அனுப்பாதவர்களுக்கு இன்றுமுதல் வி. பி. அனுப்பிக்கொண்டு வருகின்றோம். தயவுசெய்து தாமதமின்றிப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். மானேஜர்.

ஏமாங்கதத் திளவரசன்.

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

145 பக்கத் தொடர்ச்சி.

சிங்கமுகனுக்கும் சேனாதிபதிக்கும் இடையிலே நடந்த சம்பாஷணை வெகு முக்கியமானது. வாசவன் சொன்ன செய்தியைக் கேட்ட மறுதினமே அரசன் புஜங்கனைத் தன்னிடம் வர அழைத்தான். புஜங்கனும்,"மன்னவா வாழி" என்றுரைத்தவனைப் உட்புக, 'நின்னனைய அணித் தலைவர் எனக்கிருக்க வாழ்விற்கு என்ன குறை' என்று தன் மனத்துள் சொல்லிக்கொண்டே அரசன் ஆதனம் ஒன்றைக் காட்டிப், "புஜங்க, பொய்யும் வீரமும் பொருந்தாநட்பு பூண்டொழுக உன்பால் காண்கின்றேன்," என்றனன். இந்த வாசகத்தின் உட்கருத்தை ஒருநொடியில் உணர்ந்த புஜங்கன், "பெரும, நலம் பயக்கும் பொய்யும் சில உள" எனத் தாழாது பதிலுரைத்துப் பீடமிசை யமர்ந்தான்.

"ஆம், ஐய, முயற்குச் சில கொம்பும்உள அன்றோ" எனச் சினநகை புரிந்தனன் வேந்தன்.

"வேந்தே, நீ வெகுளில் எளியேன் காத்தலரிது. இதுகேள். என்மகள் தந்தைசொல் தடுத்து மணத்திற்கிசையாதது மெய்யே. கோமகற்குத் தன்பால் குறிகொண்ட அருளே ஆதாரமாக இத்திருநாட்டின் ஒருபாதி யான் அடைவது பரிபவமாகும் எனும் கருத்தினால் அவள் முரணுகின்றனள். ஆதலால் தனது காதலெல்லாம் வறிதே துறந்தேனும் நின்தேயமும் என்மானமும் சிதையாவண்ணம் காத்தற்கே அப் பேதை மணங்கோடலை மறுப்பதும் ஆகும். பகுத்தறிவிலா இச்சிறுமி மனம்உளைய மெய்சோர்ந்து பெறற்கரிய பெண்மையைப் பழுதடையப் பாழாக்க ஈன்ற தந்தை நான் கண்டும் சகிப்பேனோ! ஏமாங்கதத் திளவரசன்தான் நின்மகனாயினும் என்மகனும் அல்லனோ அன்பினால். அளப்பரும் விழைவினில் உழன்றிடுமவன் எனது புதல்வியாம் புணையைப் பற்றுதல் இன்றியே வாழ்வில் எங்ஙனம் வைகுவன்? ஆதலால் நின் மதலையையும் என் புதல்வியையும் பூவும் மணமுமெனப் பொருந்தச் சேர்த்தலே என் முதல்கடன் என்று முயன்றதும் ஒரு குற்றமோதான்?

"புஜங்க,நின் வாளோச்சும் திறம் செறுநர் கூறுவர். மற்று,உன் நாவோட்டும்தரம் இதுகாறும் கண்டிலேம். பொருளிலாப் புன் மொழியால்......"

"இறைவா, முற்றுங்கேட்டி. பொருளும் உளது, பயனும் உளது. பொருந்தக் கேட்டி."

"நரிவேட்டை ஆடியுளாயோ நீ! அவ்வற்ப விலங்கு பின்னங்காலால் புழுதிகிளப்பித் தொடர்வோர் கண்ணில் தூற்றல்போல, நீயும் சொல்தூற்றித் தப்பியோடப் பார்க்கின்றாய். களவொன்றை மறுகளவால் மறைக்கலாம் என்பது, ஏ புஜங்கா, நின் நலம்தரு பொய்போன்ற அவலக் கொள்கைகளுள் ஒன்றேயாம்."

"மன்னவர்மன்ன, சிங்கமுகப் பெருவேந்தே, நான் நினைத்த இவ்வழி, அறியாமையால் நேர்ந்ததாகலாமேனும் என் நெஞ்சறிந்த பொய்யுமன்று. நான் உரைப்பதெல்லாம் நன்கனம்கேட்டுப் பின் என்பால் வஞ்சகம் இருந்ததென்று நினைப்பாயாயின் அதற்கு நீ விதிக்கும் ஆக்கினை எதுவாயினும் எனக்கிது தகுமென ஏற்பேன். அரசே, சற்றுச் செவிசாய்த்திடுவாய். உன் குடிகளுள் தாழ்ந்த குடியின்மாட்டும் நீ ஆராய்ச்சியின்றித் தண்டம் விதிக்க யான் பார்த்ததில்லையே!"

"ஆயின், ஐய, இப்பொய்வாயால் என்னைப் புகழாமல், கோத்தருமங் காட்டாமல், நீ சொல்ல வேண்டுவதைச் சொல்லி முடி."

"எனின், பெரும, யான் பிழைத்தேன்."

"எப்பொருளில் பிழைத்தாய் என்று அந்தத்தில் ஆராய்வோம். இப்பொழுது நின்நாவை அவிழ்த்துவிடு."

"ஆதலால், இது கருதினேன். நீ தந்த நாட்டின் ஒரு பாகத்தில் யான் முடிதரிக்க, மறுதிங்களில் நன்மணம் முடித்தலென்று நிச்சயம் செய்துளோம். அளித்த தேயத்தை மீண்டும் நீ எக்காரணத்தினாலும் கேட்கவாயினும் நானே கொடுப்பினும் நீ கொள்ளவாயினும் செய்யாய் என்பதைப் பஞ்சரவல்லி நன்கு அறிவாள். சொன்னசொல் தவறாத நின்வாய்மையை, வேந்தே, அறியாதார் யார்! நீநல்கிய நாடும் அவள் கருதிய பரிபவமும் எனக்கு நிலைத்துவிடப் பின்னுமவள் மணத்தை வெறுத்துப் பயினில்லையென்று உணர்வாளன்றோ! விலக்கஇயலாததை வகிக்கவாயினும் நினைப்பாள்.எனின், கோமகன்தன் மனைவியாதற்கு இசைவாளென்று எண்ணினேன். பெருநலம் இதுபயக்க ஒரு சிறு கரவு செய்திடின் என்ன! வெள்ளைப் பொய்யால் அல்லாது வேறெவ்வழியில் அளப்பரும் இன்பம் அவ்விருவருக்கும் கைகூடும்? இயம்புதி, எனதிறையே, இயம்புதி! எப்பொருளில் பிழைத்தேனென்று குல மன்னர் தனிக்கோவே, இப்பொழுது கூறுவாய்!"

"நரியாரே, நீர் கூறியது யாவும் கேட்டோம். முன் மதித்த சித்தத்தை மாற்றுவதற்கு இக்கட்டுரையில் யாதும் கண்டிலேம். மௌலி நீ தரித்தலொன்றே இம்மணவினை முடியும் மார்க்கம் என்று சாதிப்பது அதிசயமே. மற்றவரை வஞ்சிக்கப் புகுந்த நீ சமரச தத்துவத்தினால் 'நான் நீ' எனும் பேதமின்றி இக்காலம் உன்னையே வஞ்சித்துக்கொள்ளத் தலைப்படுகின்றாய். பஞ்சரவல்லி வெறுத்திடும்படி நீ நாடேற்றுப் பின், அவள் எமதிளவலுடன் தீராவகை வதுவையிற்பொருந்துவாளோவென்று சோதனைபுரிவானேன்! நீ முன்னரே நாடு வேண்டாவென்று சாற்றிவிட்டாலோ! கரவொன்றுமில்லா இச்சூழ்ச்சியில் காரியம் முடியுமே. நீ புனைந்த பூவும் மணத்துடன் மாறாமல் சேர்ந்திடாதோ! உள்ளங்கையிற் கிடந்த நெல்லியங்கனியன்ன இந்த உபாயம் ஐய நீ, அயர்ந்ததென்ன! கூறுதி, புஜங்க, நீயே கூறுதி . மண்மகள் நீ மணக்கச் சூழ்ந்தனையல்லாது என்மகன் நின்மகள் மணத்தை விழைந்தாய் அல்லை."

பிள்ளைப்பாண்டியன் முட்டியால் குட்டுண்ட புன்கவியெனச் சிரங் கலங்கினன் பொய்வளர்த்தோதிய புஜங்கன். தர்க்கத்திற் கியைந்து அவன் தொடர்ச்சியாய்ச் சொல்லிவந்தான் என்றெண்ணி மகிழ்ந்ததை அரசன் கரதலாமலக நியாயத்தால் தடுத்துடைத்துவிட்டது முகமெலாம் வழியத் திகைத்தான். இதுகண்டு மன்னவன், "வென்றேன், வென்

றேன், இக்கபடனை யவன் வாய்மொழி கொண்டே வென்றேன்.'' என்று தன்னுள் மகிழ்வெய்தவும், புஜங்கன் ஓரளவு கலக்கம் தெளிந்து, வெகுண்டவன் போல் அரசனை உற்றுநோக்கிச் 'சொல்வன்மை அற்று நான் இன்னும் சோர்ந்திடேன்' என்பான்போல் சிரிப்பொடு சிறிது செருமிப் பின் இவ்வுரை பேசினன்: “ஆதியில் செப்பிய கருத்தை மறந்து இப்பொழுது என்பால் பிழை காண்பது மன்னவற்கு அழகாமோ! அரசே, என்னை ஓராது வைகின்றாய். நானும் உனக்கிணையான ஓர் வேந்தனல்லனாயின், நினதில்லம் புகுந்த என்மகளை வாசவன் காதலின் வெறியோய்ந்தபின் தனக்குச் சமநிலை இல்லள் என்று தக்கவாறு மதியான். இது உலகவியல். நினக்குயானிதை முன்னரே உணர்த்தியு மிருக்கின்றேன். அருமையாய் வளர்த்தஎன் மடமகட்குஇவ்விழிவு வாராமல் காப்பது என் கடன். நிலைமாறி எய்திய சேர்க்கையில் இளவரசனுக்கும் உறுதிஇராது. இவையனைத்தும் முன்னுனக்குக் கூறியுளேன். அரசெனக்குத் தந்திடநீ இயைந்ததும் இந்நியாயத்திற்கு இணங்கியேதான். எனினும் நீ மறவா திருத்தல்பொருட்டு மீண்டுமென் கொள்கையை நாட்டக்கேள். தந்தை யரசனல்லாக்கால் பஞ்சரவல்லிக்கு நாயகனும் கோமகனாகான். ஆகையால், உனது உள்ளங்கையில் கிடந்த அந்நெல்லிக்கனி உருண்டுபோயிற்று காண். யான்சூழ்ந்த சூழ்ச்சியே கார்யசாத்தியமானதென்று, அரசே, இனியேனும் சொல்.''

சிங்கமுகன் இம்மொழிகளைச் சாந்தமாய்ச் சிந்தித்தான். முதலில் நினைத்த கருத்தை இவன் மறந்தானென்று புஜங்கன் இடித்துரைத்தது உண்மையே. தர்க்கத்தில் தோல்வியை யுற்றவன் தானே என்பது அரசனுக்குத் தெரியலாயிற்று. இருப்பினும் இத்தோல்வியை மறைக்க இவனும் சிலசொற்கள் அடுக்கலாயினன். “ஏ, புஜங்க, உன் சொற்பொழிவு கேட்க எனக்கு இரக்கமே மேலிடுகின்றது. ஏதோ, கேள், காண், சொல் என்று ஏவல்வினை தொடுக்கின்றாய். பெருகப் பேசியும் நீவிளங்கவைக்காதது என் நற்றவக் குறைவே. என்ன சொல்ல முயல்கின்றாய் என்று உனக்கே தெளிந்ததில்லை. ஓதுவது இதுவென்று மனதில் கலக்கமின்றித் தெரிந்திருந்தால் வாயிலும் வாக்கியம் தெளிவுற வருமென்பர். சொற்கள் இழுக்கின்ற வழி நீ போகின்றாயேயன்றி யுன்வழி சொற்கள் வரக்காணேன். இருப்பினும் உன் கருத்துயாதென ஒருவாறு உணரலாம். நீ அரசில் அமைவதற்குமுன் பஞ்சரவல்லி வாசவனை விவாகம் செய்துகொள்வது உன் பெருமைக்கு ஒவ்வாது என்று நினைத்தனை. ஆதலால், நாடு நீ பெற்றபின் அவளை எப்படியேனும் மணத்திற்கு இணங்கவைக்கலாம் எனும் நம்பிக்கையால், அவள் மறுத்திருக்கும் மெய்நிலையை எனக்குச்சொல்லாமலே, நீ வேதபுரிமன்னன் ஆவதில் எவருக்கும் தீங்கில்லையே என்று உன்னினை, அன்றோ?''

“வேந்தர் பெரும், மெய்யுடையேன் சொல்வன்மை இன்மையால் பொய்போல் உரைத்துழன்றேன். என் கருத்தும் செயலும் இவையே. எனக்குச் சொல்ல இயலாததை நீ நின் பேரறிவினல் உய்த்துணர்ந்தாய். இனி இயைந்த செய்க,'' என்று புஜங்கன் வேண்டினன்.

தனது சொல்வன்மையையும் நுண்ணறிவையும் புகழ்ந்து புஜங்கன் பேசிய இது இச்சகமே யென்பது அரசனுக்கு ஓரளவு தோன்றியதாயினும், அதனல் அவன் உள்ளம் சிறிது அமைதி அடையாமற் போகவில்லை. அன்றியும், மாந்தர் தன்மையை ஒரு நிமித்தமாக அமைத்துக்கொண்டு, முடிவில் நாடாளும் கருமத்திலேயே அவன் கருத்தெல்லாம் அடங்கியிருந்தது என்னும் சந்தேகம் வேந்தனுக்கு அகன்றிலதாயினும் அப்புஜங்கன் கூறிய கொள்கையளவு பழுதுரைக்க வகையொன்றும் இவன் கண்டிலன். மைந்தனது மனத்திறைசை சிதைவுறாது எய்தும்வண்ணம் நாடிய கருத்துட்கொண்ட வேந்தன், பஞ்சரவல்லி வெறுத்திடாதவொரு வகையில் புஜங்கனும் நாடு பெற்று அரசனாவது எங்ஙனமென ஆராய்பவனாயினன். பேராசைப் படுகுழியில் பாய்ந்திருந்த புஜங்கன், மன்னவனது முகம் பார்த்து வாய்நோக்கிக் கண்கருதித் தான் 'கரையேறக் கைகொடுப்பானோ இவ்வேந்தன், அல்லது அங்ஙனேமண்தள்ளிப் புதைத்திடுவானோ, என்று ஏங்கமொடு காத்திருந்தான். இருவர்க்கிடையே காலமும் சிறிதளவு கழிந்தது. அதன்பின் அரசன், “புஜங்க, நாடு நீ என் கையில் இரக்கப்படாதென்று உனது புதல்வி தடுக்கின்றாளேயன்றி நீயும் ஓர் அரசனாவதில் அவளுக்கு வெறுப்புண்டோ?'' என்றனன்.

“பார்க்குங்கால்,இரப்பது இகழ்ச்சியென்று வெறுப்பவள் என் மனைவி. மகளின் கருத்து வேறு. பெண்ணின் காதலை விற்றுப் பெருநாடுபெறச் சூழ்ந்தேனென்று உலகம் பழிக்குமோவென அஞ்சி அப்பழி என்னை அணுகாவண்ணம் காத்தல் தன்கடன் என்று என்னவோ பிதற்றுகின்றாள்.''

“நல்லது, என்னிடம் ஏற்காமல் நீ அரசு அடைவதாயின் அவ்விருவருக்கும் பின்னொரு குறையில்லையே?''

“இல்லை.''

“இல்லையெனில், வேறொரு நாடு நீ பெறுதல் ஒன்றுமே அமையும்.''

“ஐய, என்னவிது! எனக்கென்று ஒருதனிப் பூபாகம் அயனும் இனிப் படைக்கப் புகுவனோ!''

“புஜங்க, எமக்குப் பகைவேந்தன் எவனேனும் இருப்பானாயின் படையெடுத்து அவனது அரசை வென்று நீ யாளலாமன்றோ!''

“வேந்தே, இந்த வழியும் என் இல்லாள் அசோகவதி சிந்தித்ததே. ஆனல் பயனில்லை. அணிகொண்டு அடர்த்ததும்வென்றதும் நானேயாயினும் வென்றநாடு வேந்தர்முறையில் நினதே யாதலால் மீண்டுமதை உன்கை யான் ஏற்றதேயாகும். என் சிறுமிக்கும் மனையாட்கும் இத்தூரம் சிந்திக்கும் திறமுண்டு.''

“ஒன்று செய், புஜங்க. நீ வென்ற அப்பகுதியை எமது ஆட்சிக்குள் அடக்க மறுத்திடு. புயவலியால் நீ கவர்ந்த அந்நாட்டில் நீயே முடிசூட்டிக்கொள். வெளிக்கு எம்மிடம் விரோதம் பாராட்டு. நான் தூதனுப்பி உன்னை வெருட்டுவேன். போரே செய், பார் கொடுக்கவேண்டா. நானே படைதிரட்டி வந்து உன்னோடு போலிப்போர் புரிகின்றேன். நான்தோற்பதும் நீவெல்வதும் ஆகமுடியும். பிறகு சமாதானம் செய்து கொள்வோம். அதன்படி நீ வென்ற நாடு உனதேயாகுக. அப்பொழுது புஜங்கன் இரக்காமல் ஏற்காமல் அரசனாய் அமைய எம்முடன் சமநிலையடைந்து, மாந்தர் இயற்கைக்கு மாறுபாடில்லாமல், வாசவற்குரிய செல்வியை மனக்குறையின்றித் தருபவனாவான்.''

“கலைவலாய், இச்சித்திரம் சிறந்தே விளங்குகின்றது. தீட்டத்தான் சுவர் ஒன்றைக் காண்கிலேன். உனது புகழாலும் கொடையாலும் திண்ணிய சைனியத்தின் ஆற்றல் கீர்த்தியாலும் அடியேன் வாளினொளியாலும், கொற்றவா, உன்னுடன் பகைபாராட்டுதற்கு எவ்வரசர் எங்குத் துணிவர்! இச் சூழ்ச்சியை விதைக்க ஒரு நிலம் வேண்டுமே! கபடநாடகம் இதை நடிப்பதற்கு அரங்கொன்று எங்குத் தேடுவது!''

இவ்வாறு புஜங்கன் சுவரும் நிலமும் நாடகமேடையும் ஆர்வத்துடன் தேடுமளவில் 'பழிக்கஞ்சாப் பாதகன் இவன்' என்று சிங்கமுகன் தன் நெஞ்சில்எண்ணினன். ஏற்பது இகழ்ச்சியென்று வெறுக்கும் மனையாளும் காதலை விற்பது காதகமென்று மறுக்கும் மகளும் இருக்க, இராசத்துரோகி என மண்தலம் முழுவதும் ஏசுவதற்கிடமான செய்கைக் கிவன் கூசாது மனங்கொள்கின்றான். கயவன் இவனாகிலும், தன் திருமகன் மணவினை இவனால் ஆகவேண்டியிருப்பதால் வாய்விட்டு இக்கீழ்மையைச் சொல்லி அரசன் இடித்துரைப் பதற்கில்லை. ஆகையால், 'ஆவதாகுக' என்றெண்ணிப், “புஜங்கா, ஆம், பகையொன்று எப்படியாவது தேடவேண்டியவர்களாய் இருக்கின்றோம். சிறிது காலம் பொறுத்திருந்தால் வழியொன்று தோன்றாமல் போகாது; நீயும் சமயம் பார்த்திரு'' எனக்கூறி விடைதந்து அகன்றான்.

அரசனது கண்ணிலே ஒரு மண்ணைத் தூவிவிட்டதாக வீறுகொண்டு மகிழ்ந்திருந்த புஜங்கனது பொருந்தா ஆசை பூர்த்தியாவதற்கு, வலிந்து ஓர்பகையரசன் படைப்பது இச்சங்கேதத்தின்படி இன்றியமையாததாயிற்று. இதற்கிடையில், கரும்பினுமினியாளைக் குயிலெனுமொழியாளை மயிலினு மழகாளைத் தன்னாருயிர் அமிர்தை அடவியில்கூடிய அன்னத்தை நெஞ்சம் நெகிழ்த்திய பஞ்சரவல்லியைப் புல்லாது பயின்றொருகால் பேசாது ஆவியொடு காயம் கரைதர வாசவச்செம்மல் வருந்துமெல்லையில், மானமா மணியிழந்து அஞ்சுதற்கிணங்கா அப்பஞ்சரவல்லியும், தன் நிழலிற்கொரு உருவானைக் குரலிற்கொரு ஒலியானைத் தனதுள்ளக்கோயில் அள்ளிக்கொண்ட அக்கள்ளக் கடவுளைச் சிந்தியா நொந்து சித்தம் சோர்ந்திடச் சிறையினுள் தானேதமியள் வதிந்தவள் ஆயினள்.

நாளொடு நாள் மாதமொடு மாதம் தொடர்ந்து கழிந்தன. பகையெங்கும் புஜங்கன் காண்கிலன். முடியொன்று தன்தலையில் ஏறாது முடிகின்றநாளெல்லாம் அவனுக்குப் பாழ்நாட்களாகத் தோன்றின. சிங்கமுகனிடம்சென்று உற்ற நண்பராயும் உறவினராயுமிருந்த அயல்அரசர்களோடு அடாதவகைகளில் பகைதூண்டுமாறு பலதரம் கற்பித்தான். அரசன் இயைந்திலன். மைத்துனனாகிய அவந்தியர் கோனொடு, கோப்பெருந்தேவியுடன் அன்றுதந்த பாரிபெர்கம் போதாதென்று இன்று போரிடச்சொன்னால் சிங்கமுகன் எவ்வாறு இசைவான்! பல்லவதேயத்து அரசகுமாரி பலஆண்டுகளுக்குமுன் சுயம்வரம் நாட்டியபோது அந்தக்காலத்தில் ஏமாங்கதநாட்டு இளவரசாயிருந்த சிங்முகன் அக்குமரியின்மீது ஆசையால் அந்தச் சுயம்வரத்திற்குப் போயிருந்தான். ஆனல் அவள் குச்சரதேசத்தரசகுமாரனையே தேர்ந்து மாலையிட்டு விட்டாள். அப்பொழுது கழிந்த இச்சம்பவத்தைச் சிங்கமுகனுக்கு இப்பொழுது புஜங்கன்நினைவூட்டிக் 'குச்சரதேசத்தரசனுடன் போரிற்குப் புறப்படு' என்றனன். அரசனுக்குச் சிரிப்பே வந்தது. இந்தவிதம் மன்னர் மரபிற்கு ஒவ்வாதனவும் கழிந்துபோன காரணங்களும் கொண்டு பேராசையால் பேசுவதும் தெரிந்துபேசாப் புஜங்கன் தனதரசனுக்குப் பொய்ப்பகை தேடிவைக்க முயன்றன எத்தனையோ! அரசனும் அவைகளை ஏற்காது அகற்றிவிடவே புஜங்கனது மனதில் ஒரு ஐயம் பிறந்தது. 'அரசன் எனக் குரைத்ததெல்லாம் வீண் வம்புபோலும். சொல்லிய எதனையும் செய்யும் சித்தம் சிங்கமுகனுக்குச் சிறிதேனு மிருக்குமாயின் நான் காட்டிய பகைகளுள் ஒன்றினையேனும் ஏற்கிரானோ! என் கழுத்தை அறுப்பதற்கு அவன் ஏதோ காலமே பார்த்திருக்கின்றான்,' என்று உன்னினன் புஜங்கன். இவ்வாறு நினைக்க நினைக்க, சந்தேகமாய்த் தோன்றிய அவ்வெண்ணம் நிச்சயமாய் உருக்கொண்டது. 'இரு இரு சிங்கமுகா, நீ யென்கழுத்தை அறுக்கின்றாயோ, நான் உன் கழுத்தை அறுக்கின்றேனோ பார்ப்போம். இந்தப் பந்தயத்தில் பிந்தினவன் மூடன்,' எனத் தீர்மானித்துச் சிங்கமுகனை எதிர்பாராமலே தான் செங்கோலனாவதற்கு இனி முயற்சி செய்ய வேண்டியது இன்றியமையாததென்று எண்ணினன். இந்த எண்ணத்தின்படிதான் இவன் வாசவனுக்குத் தன் தந்தையைக் கொன்றிடுமாறு புத்தி புகட்டியதும், அவன் பஞ்சரவல்லிபா லிருந்த காதலால், 'பின்னிது கருதுவோம்' என்று புஜங்கனைப் பிழைக்க விட்டிருந்ததும் நிகழ்ந்தன.

சீர் திருத்தம்

Man, The Reformer—by Emerson

154 பக்கத் தொடர்ச்சி

இனி, மனிதன் தனதெனக்கொள்ளும் உடைமையை-(அது திரவியமாகட்டும், அல்லது சொத்தாகும் மற்றைப் பொருள்களாகட்டும்) பற்றி ஆராய்வோம். சொத்திற்கு உடையவர் இருவர். ஒருவன் தனது உபயோகத்திற்கென முயன்று தேடிக்கொள்கின்றான்.

மற்றவனோ பிறந்த பாத்யதையால் ஒருவன்தேடியதைத் தனதாக்கிக் கொள்கின்றான். சொத்தைத் தமதாகக்கொண்ட இவ்விருவருக்குமுள்ள வித்தியாசத்தை ஊன்றி நோக்குங்கள். பொருள்கள் எவ்வகைத்தாயினும் அவற்றிற்கு விரோதிகள் உண்டு. இரும்பைத் துரு தின்றுவிடுகின்றது. துணிகளைப் பூச்சிகள் கெடுத்துவிடுகின்றன. உணவுப்பொருள்கள் நாள்பட உளுத்தும் வாடியும் அழுகியும் விடுகின்றன. பணத்திற்கு எமனாய்த் திருடன் இருக்கின்றான். பயிர்களைக் களைகள் (weeds) வீணுக்குகின்றன. கால்நடைகள், பசியாலும் பிணியாலும் மாள்கின்றன. கட்டடங்களும் பழுதாகி விழுந்துவிடுகின்றன. மேற்கூறியவைகளில் எதை மனிதன் உடைமையாகக் கொண்டாலும் அக்கணமே அவன்

அதைக் காக்கும் சேவகனுய் அமைய நேரிடுகின்றது. ஆனல், தனது சுயமுயற்சியால் தேடி ஆள்பவனுக்குக் காவல்புரியும் அடிமைத்தனம் இல்லே. ஒரு ஆற்றைக் கடக்கவோ அல்லது மீன் பிடிக்கவோ, தன் கையால் ஒரு படகைச் சமைத்துக் கொள்பவனுக்கு விரோதிகள் இல்லே. செய்த படகு ஓட்டையாகாது பார்த்துக்கொள்ளும் வேலே அவனுக்கு வேண்டுவதில்லே. வேண்டும்போது ஓட்டையை அடைத்து உபயோகப் படுத்திக்கொள்ளும் ஆற்றல் அவனுக்கு உண்டு. ஆகவே தூக்கங்கெடக் கண்கொட்டாது காவல் புரியும் சிறுமை அவனுக்கில்லே. இது முதல் சொந்தக்காரன் நிலே. பின்னவன் நிலேயை நோக்குவோம். பிறப்பின் பாத்தியத்தால் தான் தேடாப் பொருளேப் பெற்றவன் பெற்றது வெறும் பொருளேயே. ஒருவன் தேடிய பொருளே அவன் சந்ததிக்குக் கொடுக்கையில், தேடும் வன்மையையும், கையாளும் ஆற்றலேயும் கொடுக்க முடிவதில்லே. ஆகவே அடைந்ததைத் தன்நலத்திற்கென உபயோகித்துக் கொள்ளமுடியாது, அதை விரோதிகள் கவராவண்ணம் காவல்புரியும் வேலேயை மேற்கொள்கின்றுன். என்ன பரிதாபகரமான மாறுதல்! நோக்குங்கள். முன்னவன் கைவன்மைக்கு முன்நிற்க வியலாது இயற்கை விரோதிகள் ஓடின. இயற்கை அவனுக்குப் பயந்து அவனிடம் சிநேகம் கொண்டது. பின்னவன் காலமெல்லாம் காவலிலே கழிய, பெற்றவொன்றின் உபயோகம் என்னவென்பதையும் மறந்துவிடுகின்றுன். தனக்கும் பிறர்க்கும் கடவுளுக்கும், நாட்டிற்கும் உபயோகப்படுத்தவுந் தெரியாது, பொன்காக்கும் பூதமாகின்றுன். ஆனல் இவன் பணக்காரன்.

உலகசரிதையில் ஏழைகள் கொண்ட உடைமையே கவனித்தற்பாலது. அறிவும், உயர்வும், ஆற்றலுந் தான் வெற்றி. இவ்வகையில் ஒவ்வொரு மனிதனும் உலகத்தை வெற்றிகொள்ள வேண்டும்.............. உழைப்பை நான் வற்புறுத்துவதால் எல்லா மனிதரும் ஒரேவிதமான வேலேயைச் செய்யவேண்டுமென்று நான் கூறுவதாகக் கொள்ளவேண்டா. நிலத்தை உழுது பயிரிட்டு வாழ்தல் மிகப் பழையதும் எல்லாராலும் கொள்ளக் கூடியதுமான தொழில். வேறு தொழில் ஒன்றைத் தேடிக் கொள்ளாதவனும், வேறு எத்தொழிலும் தெரியாதவனும் கலப்பையைக் கைக்கொள்ளலாம் என்பதே எனது கூற்று. அதாவது,ஒவ்வொருவனும் உலகத்திலுள்ள பலதிறப்பட்ட உழைப்புடன் தனதுதொடர்பு அறுதுநின்று வாழவேண்டும் தன் பெட்டியில் இருக்கும் பொருள்காரணமாக விலகிநிற்றல் கூடாது. உழைப்புத் தெய்விகக் கல்வியை நல்கவல்லது. உழைப்பவன் அக்கல்வியைப் பயில்கின்றுன். அக்கலே பயின்றவனே இயற்கையை ஆட்சிகொள்கின்றுன்.

......கற்றல் கற்பித்தல் கவிசெய்தல் நியாயவாதம் செய்தல்போன்றதொழில்களேமறந்துவிடவில்லே. இத்தொழில் கொண்டார்க்குக் கைப்பாடுபடுதல் முடியாதென்பர் சிலர். இது உண்மையேயாயினும், உழைப்பினின்று நீங்கியவன் ஆக்கிய நூல்கள் வன்மையை இழக்கின்றன. நமது காவியநூல்களும்,வேதாந்தநூல்களும்வெறுப்பும்வியாதியும்கொண்டவைகளாயிருப்பதற்குக் காரணம் அவைகளே இயற்றியவர் வன்மையிலாத் தன்மையில் வாழ்ந்திருந்ததேயாகும். புத்தகம் சிறிதுசிறப்பில் குறைந்தாலும்குறையட்டும்,புத்தகமெழுதுபவன் திடகாத்திரனுய் நோய்நொடி யில்லாதிருந்தால் போதும்.........

.........ஒருவன் மனம் கல்வித்துறையிற் படிந்துவிடின், உழைப்பினிடம் அவன் மனம் நாடவில்லேயெனின், அவன் ஏற்காது விடுத்த உழைப்புக்கு ஈடு செய்யவேண்டும். உலக இன்பங்களே துறப்பதே ஈடு. குளத்துத் தண்ணீரும், புளித்த பழஞ்சோறும் அவனுக்குப் போதும்.........

நமது வாழ்க்கையின் போக்கை நோக்குங்கால் சமூகமுறையைச் சீர்தூக்கிப் பார்த்து, அது நமக்கு எவ்வளவு பொருத்தமுளதாக விருக்கின்றதென்பதை ஆராய்வது ஒவ்வொருவன் கடமையாகின்றது. நமது இல்லறம் நடத்து முறையில் தெய்விகமும் தூய்மையும் இருக்கின்றனவா ? நம்மை அது மேல்தூக்கி வளரச்செய்யுமா, அல்லது கீழே தள்ளிவிடும் தன்மையதா? இல்லறத்தில் நடப்பவைபற்றி நாம் ஒன்றும் உணர்வதில்லே. பழக்கம் நடத்தி வைக்கின்றது. நாம் கடனளியாகின்றேம். படம் என்றும் படுதா என்றும் பல செலவு செய்கின்றேம். ஆனல் மனிதனுக்கு இன்றியமையாதனவற்றிற்காகச் செய்யப்படும் செலவல்ல அவை. வழக்கத்தின் பேரால் செலவுசெய்து, கடைசியில் உணவுக்குப் பொருள் போதாது கடனளியாகின்றேம். அறிவிற்கும் அழகிற்கும் கடவுள் வழிபாட்டிற்கும் எனச் செலவு ஆவதில்லே. என்றாலும் நமக்குச் செலவு அதிகம். மனிதன் ஏன் பணக்காரனு யிருக்கவேண்டும்! குதிரையும் குடியிருக்க மாளிகையும், பட்டுத் துணியும் நாடகச்சாலேயும் வாழ அவசியந்தானே? இவைகளே ஏன் தேடுகின்றேம். சிந்தித்தல் என்பதை நாம் இழந்ததால்தான். மனதிற்கு உணவாக, ஒரு புதிய உருவம் ஒன்று ஒருவனுக்கு அளிப்பாயானல், அவன் தனியிடஞ்சென்றும், அவ்வுருவம் தரும் சுவையிலே வாழ்வான். ஒரு நாடு தரும் வைபவமெல்லாம் அச்சுவைக்கு ஈடாகாது. நாமோ, சிந்தனேயும் மனேபாவமும் இல்லாதவர்கள்; ஆகவே எப்பொழுதும் வறியர்களாய் வாழ்கின்றேம். ஸ்தூலமான இந்திரிய சுகங்களேயே நாடுகின்றேம்; ஆகவே நாம் பணக்காரர்களா யிருக்கவேண்டும். நமது வீட்டிற்குவரும் நண்பனே உபசரித்து மகிழ்விக்க வாக்குச் சாதுர்யம் இல்லாதுபோகவே, பக்ஷணதிகளேத் தேடுகின்றேம்.

வாழத்தெரிந்த சனங்களேக்கொண்ட சமூகத்தில் கம்பளியும், பலகாரமும் மற்ற அலங்காரச் சாமான்களும் மனிதனுக்குவேண்டா. அடிமையே அவைகளேத் தேடுவான். உண்மை மனிதனுக்குச் செலவிற்குப் பணம் வேண்டா. இருக்கும் பணத்திற்குச் செலவு தேடுவான் வீரன். பெரிய காரியங்களுக்கு நாம் பணக்காரர்களே, சுயநயமானதான காரியங்களுக்கோ, பணமில்லாது ஏழையாய் விடுகின்றேம்.

இத்தீமைகள் அகல வழியுண்டோவெனின், இருக்கின்றது. ஓரே தொழில் கற்றிருப்பவன் என்ன செய்வது என்று கேட்கலாம். அவன் கையால் உழைக்கட்டும். உழைக்கத் தெரியாது தவிப்பானுல் அது அவனுக்குப் பயிர்ச்சியைத் தருகின்றது. ஒன்றைப் பாடுபட்டுப் பெறமுடியாதவன், அந்தவொன்றை அடையாது போகட்டும். அதனுற் கெடுதல் ஒன்றுமில்லே. இவ்வாறு சிக்கனத்தைக் கற்றுக் கொள்வோம். அன்பிற்கும் அறத்திற்கு மிடமாகும் உயர்ந்தநோக்கமும் எளியவாழ்க்கையும் உள்ள சிக்

கனம் போற்றுதற்குரியது. இக்காலம் சேர்த்துவைக்கும்பொருட்டு நமது சமுகத்தில் கையாளப்படும் சுயநயச் சிக்கனம் மிகவும் இழிவானது. இன்று அழுகிப் போன பதார்த்தங்களே உண்பது, நாளே வடைபாயஸச் சாப்பாட்டிற்கெனில், அது சிறுமையின்பாற் பட்டது. அமைதியுடன் வாழ்ந்து பிறருக்கும் தனக்கும் இன்பந்தரும் வழிசென்று வாழ்வதற்கே எளிய குடிசையும், கஞ்சிச்சோறுமான சிக்கனமெனில், அது கடவுளர்களும் வீரரும் போற்றுதற் குரியதாகும்.

பிறர் உதவிதேடாது நமது அவசியப் பொருள்களே நம் கைக்கொண்டே தேடிக்கொள்ளும் பாடத்தை இனியாவது நாம் கற்றுக்கொள்ள வேண்டாவா? வெண்டிய வொன்றைச் செய்துவைக்கப் பிறரை எப்பொழுதும் கூவியழைக்கும் செயலற்ற நோயாளிகள் நமது சமுகத்தில் நிறைந்திருக்கின்றனர். எங்கும் யாவரும், இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள போகத்திற்குரிய கருவிகளேயும் நெறிகளேயும் தனது ஒரு சுகத்திற்காக உபயோகப் படுத்தித் தீர்த்து விடுகின்றனர். பின்னர்ப் புதியவழிகளும் கருவிகளும் தேடலாகின்றேம். கட்டிலும், மெத்தையும், நாடகமேடைகளும், சிற்றுண்டிச் சாலேகளும் வேட்டைகளும் நமது வாழ்வின் அவசியங்களாய் விட்டன. இவற்றில் ஒன்று இல்லாதுபோய்விடின் வாழ்வே போய்விட்டதென்று நினேத்து வாடித் தவிக்கின்றேம். இல்லாத வொன்றைப் பெறவென்று தினமும் தினமும் அலேவது அழகுடையதோ, அல்லது வாழ்விற்கு இன்றியமையாச் சிலவற்றைப் பிறர்துணே யின்றி நாமாகப் பெற்று, மிகுந்த பொருளேப் பிறர் நலத்திற்கென வீந்து வாழ்தல் அழகுடையதோ , சொல்லுங்கள். நமது காரியங்களே நாமே பார்த்துக்கொள்வதும், நாம்பெற்றவொரு பொருள்வன்மையால் நமது சுகத்திற்கெனப் பிறரை ஏவுவதை விட்டுவிடுவதும் இன்று சுவையுடைய காரியமாய்த் தோன்ருது இருக்கலாம். ஆனல் அது தான் என்றும் ருசிகாமானது என்பதைப் பின்னர் அறிவீர்கள். நான் இப்படிக்கூறுவதால் சமுக அமைப்பு,வாழ்க்கைவிதி, பழக்கவழக்கங்கள் அனேத்தையும் விட்டுவிடுமாறு கூறுவதாகக் கருதவேண்டா. ஆனல் ஒவ்வொரு மனிதனும்தனது உணவைப்பெறுங்காலே, 'இதை எனது மெய்வருந்த உழைத்துப் பெற்றேனு' என்று தன்னேத்தானே கேட்டுக்கொள்வானுயின் போதும். வேண்டிய மாறுதல்கள் தானுக ஏற்படும், நமது வாழ்க்கைக் கட்டடத்தை ஒவ்வொரு கல்லாக எடுத்துப் புதுப்பித்து விடலாம். சீக்கிரத்தில் கட்டடம் செப்பனிடப்பட்டுப் புதியதாய் மாறிவிடும்.

(தொடரும்)

வில்லி பாரத விளக்கம்

ஆதிபருவம்.

சம்பவச் சருக்கம்

கோதாவிரியினே வருணிக்கத் தொடங்கிய கம்பர் அதைச் சான்றேர் கவிக்கு உவமை கூறினர். அங்ஙனமாயின், சம்பவச் சருக்கம் வேனிற் காலத்தில் வற்றிய பாலாற்றினிடையே செல்லும் ஒரு சிறு நீரொழுக்குப் போன்றிருக்கிறது. இதில் சிரக் கம்பஞ் செய்யத்தகுந்த சிறந்த செய்யுள்கள் இடையா. விசித்திரவீரியன் இறந்ததுமுதல், வசுதேவர் கிருஷ்ணன் முதலியோர் அத்தினபுரிக்குவந்து தங்கிச் சென்றதுவரையில் நிகழ்ந்த சம்பவங்களேக் கூறும் சருக்கம் இது.

110 பக்கத் தொடர்ச்சி

தென்புலத்தார்க்கு இறுக்கவேண்டிய கடனேச் செய்யும்பொருட்டுக் கணவனுடன் பிறந்தாருழைக் கலந்து ஓர் மகனேப் பெற்றுக்கொளல் என்னும்வழக்கம் நாம் முன்கூறியபடி, உலகம் நாகரிகம் அடையாத புராதன காலத்திய வழக்கமா யிருந்தது. இராமாயணத்திற்கும் பாரதம் முந்தியதென்பதற்கு இவ் வழக்கமும் சான்று பகரும். விசித்திரவீரியனுக்குப் பிள்ளேகளில்லாமற் போகவே, வீடுமனே யடைந்து அவன்சிற்றன்னேயும், "இந்தமாமரபரும் பனிப்பகைச் சிரத்தெழிலியொத்தது மன்னே" (இந்தமரபும் எழிலிச் சிரத்து அரும் பனிப்பகையொத்தது)என்று மனமுடைந்துகூறினள். மேகங்களினுச்சியில்நிற்கும் சூரியன் ஒளிமழுங்கி நிற்பதுபோல், நமது மரபும் மகப்பேறின்றி ஒளிமழுங்கிற்றுதலால், தேவர் நீதியின்படி நீ அம்பிகை அம்பாலிகைகளுக்கு மகவளிக்க வேண்டுமென் றிரந்தாள். இதைக்கேட்ட மன்பதை மேலோன், தன்னிரு செவிபொத்தி, "மீண்டு மாநதி வயின்மிசைப் புரியினென் விரதமுந் தபுமென்றுன்". (யான் மீண்டும் என் தாயாகிய கங்கையின் வயிற்றிற் பிறந்தாலொழிய என் விரதம் கெடுவதற்கு ஏதுவில்லே யென்றுன்). 'பிறந்து மண்மேல் வாழும் ஒருவன் மீண்டும் தன் தாய்வயிற்றிற் பிறப்ப தியலாததுபோல், என் விரதம் கெடுதலும் இல்லேயாதலால் யான் நின் வேண்டுகோட்கு இணங்கேன்' என்று வீடுமன் மறுத்தான். அன்றி, நதியானது மீண்டும் தான் பிறந்தவிட மாகிய மலேச்சாரலுக்குத் திரும்பிச் சென்றுலன்றி என் விரதமும் கெடாதுஎன்று கொண்டு உரைகூறவும் இடமுண்டு. ஓடும் நதியானது மீண்டும்தன் னுற்பத்திஸ்தானத்தை யடையாததுபோல், துறவற ஒழுக்கத்திற்செல்லும் யானும், என் விரதங்கெட யாதொன்றையுஞ் செய்யேன் என வீடுமன் மறுத்துக் கூறிவிட்டான். அம்மாதருக்கு வியாதன் ஓர் தேவரன் (கணவனுடன் பிறந்தவன்) ஆதலால் அவனேக்கொண்டு தன்னெண்ணம் முடிப்பான் வேண்டி, வீடுமனுக்குச் சிற்றன்னேயும் அவன் பிறப்பை உணர்த்தினள். வியாசனும்,

"அரணியின்புறத் தனலென வென்வயி னவதரித்தன னம்மா," (தீக்கடை கோலிடத்தில் நெருப்புத் தோன்றியதுபோல், எளிய என் வயிற்றிற் சிறந்த முனிவன் தோன்றினன்)அவனும்கூடிய வப்பொழுதே தோன்றினன் என்னும் குறிப்புத் தோன்றவும் 'அரணியின் புறத்தனலென' என்று கவி கூறியிருக்கிறுர்.

பிறகு வியாதன் வந்தனன். வியாதனைப்பற்றிக் கூறு மிடத்துக் கவி,

'விழுதுடைத் தனியாலென விருந்ததொல் வியாதன்'
எனவும்

'கிளைத்திடுந் துகிர்க்கொடி நிகர் சடையவன்'

[ஆல் - ஆலமரம், துகிர் - பவழம்] எனவும் வியாசமுனிவரின் சடைமுடியைக் குறித்திருக்கிறார். தொல் வியாதனென்னும் முதலடியினால் அவருடைய பெரும் வயதும் தோன்றும். பிறகு, திருதராட்டிரனும் பாண்டுவும் தோன்றினார்கள். பாண்டுவிற்குப் பிரதையை மணம்பேசி முடிவித்தார்கள். பிரதையாகிய குந்தியின் வரலாற்றைச் சொல்லுமிடத்துக் கன்னன் பிறப்பையும் குறிக்க நேர்ந்தது. 'கசட்டுறு முனி,' யாகிய துருவாசர், குந்திபோசரிற் சூரனிடஞ் சென்று தங்கினர். அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்ய, விளையாட்டை மறவாத இளம் பருவத்தினளாகிய பிரதை, சூரனால் நியமிக்கப்பட்டாள். வெய்ய மாமுனியும் புகழும்வண்ணம் அவள் நடந்துகொண்டமையால் அவளுக்குச் சில மந்திரங்களை முனிவர் கூறிச் சென்றார். இந்த மந்திரங்களின் வலிவைப் பரிசோதிக்கவெண்ணிப் பிரதையும் சூரியனுக்குரிய மந்திரத்தை யுச்சரித்தாள். சூரியனும் வந்து மடப்பாவையை,

"அம்புயானன மலர்வுறக் கரங்களாலணைத் தனனழகெய்த" (அவளுடைய முகம் மலரும்படி அவளைக் கரங்களாலணைத்தான்) 'கன்னிகன்னியென் கைதொடேல்என்று மெய்குலைந்து நாணிஇதயமும்வேறுனாள்' என்று அடுத்தசெய்யுளிற் கூறியிருப்பதால், சூரியன் செய்கைஅவளை முகமலர்ச்செய்திராது.ஆனால், மெய் தீண்டியவுடன் தற்செயலாய் உண்டாகிய மகிழ்ச்சியால் முகமலரப்பெற்றுப் பிறகு தன்னினைவடைய அவள் முகம் மாறினாள் என்று கொள்ளலாம். இவள் செய்கையைக்கண்ட அருக்கனும்"மெய்யினு மனமிகக் கோதித்தன னுயிர மடங்காக". ஆயிரமடங்கு மனங் கொதித்தானென வழக்கச் சொற்களையே கவியிலேற்றியிருப்பது நோக்கத்தக்கது. கதிரவன் சென்றபின் குந்தியும் "அந்தியா ரழலெனப் பரிதியொளியடைந்தாள்" அந்திக்காலத்தில் சூரியன் தன்னொளியை நெருப்புக்குத்தந்து பின் காலையில்மீண்டும்அவ்வொளியைப் பெற்றுக்கொள்கிறானென்பது மரபாதலால், சூரியனைச் சேர்ந்தவவளும் அவனொளியைப் பெற்று விளங்கினாள் என்பது கவிக்கூற்று. பின்னர்க் கருவுயிர்த்துக் கன்னியும் கன்னனைப் பேழையில்வைத்து கங்கையாற்றில் விட்டாள். பகீரதி என்னும் அன்னையும், அக்குழந்தையைச் 'சஞ்சரத்திரைக்கரங்களாலெடுத் தெடுத்தசையவே தாலாட்டி'த் தேர்ப்பாகனார்க்குக் கொண்டு சேர்த்தாள். அஞ்சரத்திரை எனவும் பாடபேதமுண்டு. சஞ்சரத்திரை யென்னுமிடத்து சஞ்சாரஞ் செய்யும், அதாவது உலவும், அலைகள் என்வும், அஞ்சரத்திரை யென்னுமிடத்து அழகிய நடையையுடைய அலைகளெனவும்கொள்ளவேண்டும்.கங்கை கரங்களாகிய திரைகளாலெடுத்துத் தாலாட்டினாள் என்பது பொருத்தமுடையதாயினும், அவ்விஷயத்தைப்பற்றி எவர் எழுதினாலும் அவ்வாறே கூறியிருப்பாராதலால் அதில் விசேஷ மொன்றுமில்லை.

வேட்டையிற் சாபம் பெற்ற பாண்டு, மாதர் நலம் விரும்பானாய்த் துறவறம் மேற்கொண்டு காட்டிற் சென்று தவஞ்செய்தான்.

ஆரக்குழம்பி லளைந்தார மணிந்து விம்மும்
பாரக்குசங்கள் பலதைவரும் பான்மை நீங்கி
நாரக்கமல கரசோதி நகங்கண் மீள
வீரக்குசங்கள் கிழிக்குந்தொழிற் கேற்றவாலோ

[சந்தனக் குழம்பிற்றோய்ந்து முத்து வடமணிந்து இறுமாந்து மேல்நோக்கி நிற்கும் பெரிய பயோதரங்களைத் தடவும் தன்மையை விட்டு நீர்நிலைகளிலுள்ள தாமரை மலர் போன்ற கைகளிலுள்ள பிரகாசம் பொருந்திய நகங்கள் மீண்டும் தருப்பைப் புற்களைக் கொய்யும் தொழிற்கு ஏற்று நின்றன] என்று கவி இரங்குகிறார். இவ்விடத்து, ஆரம் குசம் என்னும் சொற்களைப் பல பொருட்பட உபயோகித்திருக்கிறார்.

வீடுகளில் இளஞ்சிறார்களிருப்பது மங்கலமென்றும், அவர் மழலைச்சொற்களைக் கேட்டல் செவிக்கின்பமென்றும் அவர் மெய்தீண்டல் உடற்கின்பமென்றும் பலகவிகள் பலவாறு புகழ்ந்திருக்கிறார்கள். தெய்வப் புலமைத் திருவள்ளுவர், தம்மக்கண் மழலைச் சொற்களைக் கேளாதவர் குழலினிது யாழினிதென்பர் என்று கூறியிருப்பது யாவருக்கும் தெரிந்ததே. அவ்வாறே புகழேந்தியும், இன்னடிசில் புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய் மக்கள், எனவும் சிறப்பித்துக் கூறியிருக்கிறார். வில்லியும்,

கல்லாமழலைக் கனியூறல் கலந்து கொஞ்சுஞ்
சொல்லாலுருக்கி யழுதோடித் தொடர்ந்து பற்றி
மல்லார்புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்த
ரில்லாதவர்க்கு மனைவாழ்வி னினிமை யென்னும்,

என்று மக்கட்பேற்றைப் புகழ்ந்து கூறியிருக்கிறார். குழவிகள் இட்டும், தொட்டும், அளைந்தும், துழவியும், உண்ணும் இன்னடிசிலென இன்னொரு கவியும் கூறியிருப்பது, இங்கு அறியத்தக்கது.

குந்தி மகப்பெற்றாள் எனக்கேட்ட காந்தாரி, வயிற்றில் கல்லைக்கொண்டு குத்தினளாம். தன் கணவன் குருடன் எனக் கேட்டது முதல், "இமைத்த கண்ணிணை மலர்ந்தினி நோக்கிலேன் யாரொருவரை யென்று" கண்ணை மறைத்து உயிர்வாழ்ந்த உத்தமி, வயிற்றிலடித்துக் கொண்டாளென்பது நகைக்கிடமாகிறது. ஆயினும் அது வில்லியின் பிழையன்று. வடநூலாக்கியோரது குற்றமாகும். நிற்க, கலங்களிற் சேர்த்த கோசத்தசையினைக் காந்தாரி 'ஈற்றளை யடைந்துவைகும் பாம்பெனப் பருவநோக்கி யிருந்தனள் பழுதிலாதாள்.' முட்டையையுடையபுற்றையடைந்து அதிற்றங்கிக் குஞ்சுகள் பொரிக்கப்படும் வரையில் அதைவிட்டு நீங்காத பாம்பைப்போல், காந்தாரியும் தாழிகள் பிள்ளைகளாயினும் பருவத்தைநோக்கி அவைகளைவிட்டு நீங்காமற் காத்திருந்தாள். பிறகு நூற்றுவரும் துச்சளையும் பிறந்தார்கள் அதன்பின் மற்றைய பாண்டுவின் மைந்தர்களும் பிறந்தார்கள். பின்னால் வசந்தகாலம் வந்தது.

விதுநலம்பெறுகாவெங்கு மெய்சிவப் பேற வண்டு
[லாவக்
புதுமையின் மூான்று மொய்ப்பப் புதுமணம் பரந்து
கதுமெனத் தலைந டுங்கக் காறடு மாறிற் றம்மா [தார்'
மதுமயர்ந் தவரில் யாவர் மண்ணின்மேன் மயக்கு று

[சந்திரனது குளிர்ந்த கிரணங்களைப் பெற்ற சோலை, தளிர்கள் சிவப்பேறப் பெற்று, வண்டுகள் ரீங்காரஞ்செய்து மொய்ப்ப, பூக்கள் தாதுகுத்து மணம்பரவ, கிளைகள் தலையசைக்கத் தென்றற்காற்று வீசிற்று; கட்குடித்தவர்களில் யார் மாநிலத்தில் மயக்கமடையாதவர்?] என்று வசந்தகாலத்தைக் கவி வருணித்திருக்கிறார். கட்குடியன் போல், சோலை கால் தடுமாறிற்று என இயையும் அது போல் பாண்டுவின் மனமும் தடுமாறிற்று. அதனால் அவன் தன் சாபத்தை மறந்தவனாய்த் தன்னிளைய மனைவியோடு பழங்கவேட்டினான். பின்னால் விளைந்த கலவியின் காரணமாய் அரசன் உயிர் துறந்தான்.

அஞ்சுதரு தீவினையி னலமுது நஞ்சா
நஞ்சும முதாமுரிய நல்வினையின் மாதோ

பிள்ளைகளைக்கொண்டு குந்தி நகரமடைந்தாள். பூபாரந் தீர்க்கத் தோன்றிய கிருஷ்ணனும், வசுதேவரும் அத்தினபுரி யடைந்து, சிலகாலந் தங்கி விருந்துண்டு சென்றார்கள். இளஞ் சிறுவர்களெல்லாம் தத்தம் விளையாட்டில் கருத்தைச் செலுத்தி வளர்ந்துவரும் நாளில் வீமன் கருடனையும், கௌரவர் நூற்றுவரும் பாம்புகளையும் ஒத்திருந்தார்கள்.

எயின லம்புனை கோபுர மாபுரத்
தெழுது மாளிகை தோறும்
வெயினி லாவுமிழ் கனகநீள் வீதியில்
விலாச முற்றிடு நாளில்
பயினன் மேல்வரு கல்லெனச் செறிந்தமெய்ப்
பவனன் மைந்தனு மொத்தான்
வயின தேயனைக் காத்திர வேயரை
மன்னன் மைந்தரு மொத்தார்

[விலாஸம் - விளையாட்டு; பயினன்மேல் வருகல் - படத்தையுடைய ஆதிசேடன் மேல் நிற்கும் மேருமலை. வயின தேயன் - கருடன். காத்திரவேயர் - ஸர்ப்பங்கள்]

தமிழ்ப் பாடம் 61.

[நள வெண்பா]

கலி நீங்கு காண்டம்.

வாகுகன் மொழிந்ததுகேட்டு, அவன் உரைக்கும் உருவிற்கும் உள்ள வேறுபாட்டை நினைந்து வியந்தவனாய்ச் சுவேதன் என்னும் அந்தணன் விதர்ப்ப நாடு வந்துசேரத் தமயந்தி மிகுந்த ஆத்திரத்தோடு உற்றது வினவி,மீண்டும் அவனை அயோத்திக்கு அனுப்பிய செய்தியை இனிவரும் மூன்று செய்யுள்கள் கூறுகின்றன.

எங்க ணுறைந்தனைகொ லெத்திசைபோய் நாடினை
கங்கை வளநாட்டார்தங் காவலனை—அங்குத் [கொல்
தலைப்பட்ட வாறுண்டோ சாற்றென்றாள் கண்ணீர்
அலைப்பட்ட வாகத்தா ளாங்கு. 35

பதவுரை

ஆங்கு - அவ்வந்தணன் வந்தபோது,
கண் - கண்ணிலிருந்து வரும்
நீர் - நீரானது
அலைப்பட்ட - அலைபடும்படி புரண்டோடிய
ஆகத்தாள் - மார்பையுடைய தமயந்தி,
" எங்கண் - எவ்விடத்தில்
உறைந்தனை - தங்கினாய்
எ - எந்த
திசை - திக்கில்
போய் - போய்
நாடினை - தேடினாய்,
அங்கு - நீ போனதிசையில்
கங்கை - கங்கையாற்றினது
வளம் - வளப்பம் மிகுந்த
நாட்டார்தம் - நாட்டினர்களாகிய நிடதர்களது
காவலனை - அரசனை (நளனை)
தலைப்பட்டவாறு - சந்தித்தது
உண்டோ - உண்டோ,
சாற்று - சொல்"
என்றாள் - என்று கூறினாள்.

விரிவுரை :—ஆத்திரத்தால் வினவுகின்ற தமயந்தி சொற்களை அடுக்கிப் பொழிகின்றாள். 'நளனை நீ கண்டதுண்டோ' என்று மாத்திரம் கேட்கவேண்டிய அப்பேதை அமைதியற்று இவன்தங்கிய இடமும் சென்ற திசையும் பலபட வினவினாளாலும் அவ்வந்தணன் கூறவேண்டியதை மாத்திரம் மிகவும் சுருக்கமாக நன்கு கூறுகின்றான்.

வாக்கினான் மன்னவனை யொப்பான் மறித்தொருகால்
ஆக்கையே நோக்கி னவனல்லன்—பூக்கமழுங்
கூந்தலாய் மற்றக் குலப்பாக னென்றுரைத்தான்
ஏந்துநூன் மார்ப னெடுத்து. 36

பதப்பிரிவு :—வாக்கினால் மன்னவனை ஒப்பான் மறித்து ஒருகால் ஆக்கையே நோக்கின் அவன் அல்லன் பூ கமழும் கூந்தலாய் மற்று அ குல பாகன் என்று உரைத்தான் ஏந்து நூல் மார்பன் எடுத்து.

பதவுரை

நூல் - பூணூலை
ஏந்து - தாங்கிய
மார்பன் - மார்பைஉடைய அவ்வந்தணன்,
" பூ - பூவினது மணம்
கமழும் - கமழ்கின்ற
கூந்தலாய் - கூந்தலையுடையவளே,
அ - அந்த
குல - சிறந்த
பாகன் - பாகனானவன்,
வாக்கினால் - பேச்சினால்
மன்னவனை - அரசனை
ஒப்பான் - போன்று இருக்கின்றான் (ஆனால்),
மறித்து - மீண்டும்
ஒருகால் - ஒருதரம்
ஆக்கையே - (அவனது) சரீரத்தையே
நோக்கின் - பார்த்தால்
அவன் - அரசன் எனத் தகுந்தவன்
அல்லன் - ஆகமாட்டான்"
என்று - என்று
எடுத்து - எடுத்து
உரைத்தான் - சொன்னான்.

விரிவுரை:— அந்தணன் கூறியவெல்லாம் இச்செய்யுளில் கூறப்பட்டிருக்கவில்லை. முதலில் அவள் விஷயத்தை அறிந்துகொள்ளும்படி சுருக்கமாக இதனைச்சொல்லிப் பிறகு தான்கண்ட வாகுகனது உருவத்தையும் அவன் உரைத்த சொற்களையும் விரிவாகக் கூறியிருத்தல்வேண்டும். 'அக்குலப் பாகன்' என்று சுட்டியது, கூறும்போது இவன் நினைவில் தோன்றிய

உருவத்தைக் கருதிக் கூறியதெனக் கொள்ளலாம். “தலைப்பட்டவாறுண்டோ” என்று கேட்ட தமயந்திக்கு இவன் “தலைப்பட்டேன் என்றும் சொல்வதற்கில்லை. தலைப்படவில்லை என்றும் சொல்வதற்கில்லை. என்னுரைக்கு நேர்நின்று எதிர்மாற்றந் தந்தவன், காவலன் அல்லன், ஓர் பாகனே. அவன் உருவமும் இது, அவன் கூறியதும் இது. இனி உன் நுண்ணறிவிற் கேற்றவாறு உண்மை யாதென ஊகித்துக்கொள்” என்று இயம்புவானாயினன்.

பாகன், என்பதைத் தமிழ்மொழியாகக் கொண்டால் அது தேர்ப்பாகனைக் குறிக்கும்; வடமொழியாயின் சமையல் செய்வோனைக் குறிக்கும். நளன் இவ்விருதொழிலும் அங்குச் செய்திருந்தானாகையால், இவ்விரு பொருளிலும் அவனைப் ‘பாகன்’ என்று சொல்வது பொருந்தும்.

உருவம் எதுவாயினும் தொழில் எதுவாயினும் ஒருவனுடைய பெருமையை அறிவதற்கு இடமாயிருப்பது அவன் வாக்கு. நளன் வாகுகனாய்ச்சென்று அயோத்திமன்னனுக்குத் தான், “மான் தேர்த்தொழிற்கும் மடைத்தொழிற்கும் மிக்கோன்” என்று தெரிவித்துக்கொண்டபோது அம்மன்னன், “இம்மொழிக்குத் தக்கானை இங்கே தருமின்” என்று மதித்துரைத்ததை முன் கண்டோம். அந்தணனும் இங்கு வாக்கினாலேயே அவன் மன்னவன் ஆதல்வேண்டும் என மதிக்கின்றான். ஔவை பிராட்டியாரும் துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார்தமக்கு உண்டாகும் நலங்களிலெல்லாம் வாக்கு உண்டாவதையே முதன்மையாக வைத்திருக்கின்றார்.

மீண்டோர் சுயம்வரத்தை வீமன் றிருமடந்தை
பூண்டாளென் றந்தணநீ போயுரைத்தால்-நீண்ட
கொடைவேந்தற் கித்தூரந் தேர்க்கோலங் கொள்
படைவேந்த னென்றாள் பரிந்து. 37. [வான்

பதப்பிரிவு:—மீண்டு ஓர் சுயம்வரத்தை வீமன் திருமடந்தை பூண்டாள் என்று அந்தண நீ போய் உரைத்தால் நீண்ட கொடை வேந்தற்கு இ தூரம் தேர்கோலம் கொள்வான் படைவேந்தன் என்றாள் பரிந்து.

பதவுரை

“அந்தண - அந்தணனே,
‘வீமன் - வீமராஜனுடைய
திரு - அழகிய
மடந்தை - பெண்
மீண்டு - மறுபடியும்
ஓர் - ஒரு
சுயம்வரத்தை - சுயம்வரத்தை
பூண்டாள் - மேற்கொண்டாள்’
என்று - என்று
நீ - நீ
போய் - (அயோத்தியில்) போய்
உரைத்தால் - சொன்னால்,
நீண்ட - உயர்ந்த
கொடை - ஈகையையுடைய
வேந்தற்கு - இருதுபர்ண வேந்தனுக்கு,
படை - படைகளையுடைய
வேந்தன் - நளவேந்தன்
இ - இந்த
தூரம் - தூரத்தளவும்
தேர்க்கோலம் - தேரோட்டும் கோலத்தை
கொள்வான் - அடைவான் (அதாவது சாரதியாக வருவான்)” என
பரிந்து - அன்போடு
என்றாள் - (தமயந்தி) சொன்னாள்.

விரிவுரை:—தமயந்தி மிக்க நுண்ணறிவு உடையவள். நளன் சென்றடைந்த இடத்தைத் தேடித்தெரிந்துகொள்ளச் செய்த உபாயம்போலவே, அவனைத்தன்னிடம் வரவழைப்பதற்கும் ஓர் உபாயம்செய்கின்றாள். எனினும் உரைத்த பதிலைக்கொண்டு அக்குலப்பாகனை நளனென்றே நினைக்கலாமாயினும் உருவம் வேறுபட்டிருப்பதால் அவனே நளன் என்று உறுதியாய்க் கொள்வதற்குமில்லை.ஆதலால் அப்பாகனைத் தன்னூர்க்கு வரச்செய்து தானே நேரில்பார்த்தும் பின்னும் சில சோதனைகள் செய்தும் உண்மையைத் தேர்ந்தறிய விரும்பினாள். புத்திகூர்மை யுள்ளவளாதலால் அதற்குத் தக்க உபாயமும் வெகுவிரைவில் ஊகித்தனள். தனக்குச் சுயம்வரம் என்றால் இருதுபர்ணன் தவறாது வருவான் என்பது அவள் துணிபு. இருதுபர்ணனுக்குச் சாரதியாய் வருவதும் அவ்வாகுகனாய்த் தான் அமையவேண்டும் குதிரையின் மனம் அறிந்து மந்திரத்தால் ஓட்டும் சக்திவாய்ந்தவன் நளன் என்பது அவளுக்குத் தெரியும். அவனையல்லாது வேறு யாரையும் பாகனாய்க்கொள்ள இருதுபர்ணனுக்கு முடியாது. ஏனெனில், அந்த இரண்டாம் சுயம்வரமும் நாளைக்கே நடக்குமென்று அந்தணனை இருதுபர்ணனுக்குச் சொல்லச் சொல்கின்றாள். இது பின் வருகின்ற ஒரு செய்யுளால் தெரியும். நானூறு நாழிகைதூரம் நாளொன்றில் தேர்கடவ வல்லவன் நளன் ஒருவனேயாதலால், அவ்வாகுகன் வாஸ்தவத்தில் நளனேயாகில் இருதுபர்ணனும்தன் வாகுகப்பாகனது திறமறிந்து அவனையே தேர்க்கோலங் கொள்வதற்குத் தேர்ந்திடுவன். அப்படி ஒருநாளில் அப்பாகன்தேரைக் கொணர்ந்து சேர்ப்பானானால் அதுவே அவன் நளன் என்பதற்கு ஒரு சாக்ஷியுமாகும். இத்தூரம் ஒரு நொடியில் யோசித்தாள் தமயந்தி. யோசித்து இவ்வுபாயத்தைக் கைக்கொண்டாள்.

வீமன் மடந்தைக்கு இரண்டாம் சுயம்வரம் என்ற சொல்லை ‘இது ஏதோ, வம்பு’ என விலக்காது நம்பி வரத்தகுந்த பேதை அக்கால அயோத்தி மன்னன் என்பதும் தெரிந்திருக்கவேண்டும். அவன் அவ்வாறே முழுப்பேதை என்பதைப் பின் காண்கின்றோம்.

இலக்கணம்.

உகரம் மொழிக்கு இறுதியில் வரும்போதுதான் தன் ஒரு மாத்திரையில் குறுகி அரைமாத்திரையாக ஒலிக்க இயலும் என்று முன் சொன்னேன். அப்படிக் குறுகி ஒலிக்கும்போது அவ்வுகரத்திற்குக் குற்றியலுகரம் என்று பெயர். மொழிக்கு இறுதியில் வரும்போது தான் உகரம் குறுகும் என்று சொன்னேனேயொழிய, அவ்வாறு இறுதியில் வரும்போதெல்லாம் குறுகும் என்று சொல்லவில்லை. வீடு என்ற சொல்லின் இறுதியில் இருப்பது உ என்னும் எழுத்து. அந்த உகரம் ட் என்னும் மெய்யின்மேல் ஏறி அந்த வார்த்தையின் கடைசிச் சப்தமாயிருப்பதை உச்சரித்துப் பாருங்கள்—வீ ட் உ—. ஆகையாற்றான் அதனை ஈற்றுகரம் என்கின்றோம்.

வீடு என்று சொல்லையும் விடு என்ற சொல்லையும் உச்சரித்துப்பாருங்கள். அப்படியே, சேறு செறு, போது பொது, பாகு பகு, பாசு பசு, என்பன போன்ற

இவ்விரு சொற்களை அடுத்தடுத்து உச்சரித்துப் பாருங்கள். பார்த்தால் வீடு சேறு போது பாகு பாசு என்ற சொற்களின் ஈற்றிலுள்ள உகரங்களே குறுகி ஒலிப்பது நம் காதிற்குத் தெரியலாகும் மற்று விடு செறு பொது பகு பசு, என்பனபோன்ற வார்த்தைகளில் உகரம் ஈற்றிலிருந்தாலும் அது குறுகி ஒலிக்கவில்லையாகையால் குற்றியலுகரம் இல்லை. குறுகாமல் தன்னுடை ஒரு மாத்திரையைப்பெற்று ஒலிக்கின்ற உகரத்தை முற்றியலுகரம் அல்லது முற்றுகரம் என்றழைப்பர்.

முன்சொன்ன உதாரணங்களிலிருந்து ஒன்று உணரலாம். அவைகளெல்லாம் இரண்டே எழுத்துக்களை உடைய சொற்கள். அவ்விதம் இரண்டு எழுத்துக்களை உடைய சொற்களின் ஈற்றில் வரும் உகரம் குறுகி ஒலிக்கவேண்டுமானால் வீடு காசு சேறு பாகு போது போன்ற சொற்களைப்போல் முதலெழுத்து நெடில்களாகவே இருப்பது தெரிகின்றது.

இனி, உடு ஊடு உதடு உதவு, என்று நான்கு வார்த்தைகளை எடுத்துக்கொள்ளுங்கள். இவைகளில் முதலிரண்டு வார்த்தைகளும் இரண்டு இரண்டு எழுத்துக்களை உடையன. மற்ற இரண்டு வார்த்தைகளும் இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களை உடையன. இவைகளில் ஊடு உதடு என்ற இரண்டு சொற்களின் ஈற்றில் உள்ள உகரங்களே குறுகி ஒலிக்கும். உடு,என்ற சொல்லின் ஈற்றில் உள்ள உகரம் குறுகாததற்குக் காரணம் தெரியும். இரண்டெழுத்துச் சொல்லின் இறுதியில் உள்ள உகரம் குறுகி ஒலிக்கவேண்டுமானால் முதலெழுத்து நெடிலாக இருக்கவேண்டுமே. உடு, என்பதில்முதலெழுத்தும் குறிலாகையால் ஈற்று உகரம் குறுகவில்லை. ஊடு என்பதில் முதல் எழுத்து ஊ நெடிலாகையால் ஈற்றில் டு வில் உள்ள உகரம் குறுகியது. உதடு, என்பது இரண்டிற்கு மேற்பட்ட எழுத்தை உடையது. பலாசு, பாடாது படகு இறும்பூது, வேண்டு, என்பனபோன்ற சொற்களில் இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்கள் இருப்பதால் அந்த வார்த்தைகளில் ஈற்று உகரத்திற்கு முன் இருக்கின்றஎழுத்துக்கள்எல்லாம் நெடிலாயிருந்தாலும் சரி எல்லாம் குறிலாயிருந்தாலும் சரி, சில நெடிலாகவும் சிலகுறிலாகவும் இருந்தாலும்சரி, ஈற்றிலுள்ள உகரம் குறுகலாம். உதடுஎன்னுஞ்சொல்லின் ஈற்றிலுள்ளஉகரம் குற்றியலுகரம். ஆனால், ‘உதடு உதவு’ என்ற இரண்டுசொற்களையும் உச்சரித்துப் பாருங்கள். உதடு என்ற சொல்லின் இறுதியில் ட் என்னும் எழுத்தின் மேல்ஏறியிருக்கின்றஉகரம் குறுகி யிருக்கின்றது.உதவுஎன்னும் சொல்லின் இறுதியில் வ் என்னும்எழுத்தின்மேல் ஏறியிருக்கின்ற உகரமோ குறுகவில்லை. ஆதலால் இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களையுடையசொற்களின் இறுதியில் வந்தாலும் உகரம் குறுகியே தீரவேண்டுமென்ற நியதி இல்லை.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

ஐயம் விளைத்துள்ள ஐயம்.

சென்றவார இதழில், “சிலப்பதிகாரமும் மணிமேகலையும், சில ஐயம்,” என்ற தலைப்பின்கீழ், ஸ்ரீமான் P. இராமாநுஜன் எழுப்பியுள்ள ஐயங்கள் மூன்றனுள் முதலாவதான “பொய்யாற் பொலிவது புலமையோ?” என்ற ஐயத்தைக் “கலா நிலயம்” தனது தலையங்க வாயிலாக விளக்கியுளது. கலா நிலயத் தலையங்கங்களின் நேர்மையையும், ஆழ்ந்த கலையுணர்வையும் தெளிவையும் அறிவேன். ஆதலின், அது கைக்கொண்டுள்ள இவ்வைய விளக்கக் கருமத்தில் யான் புகுந்திட நினைக்கிலேன். எனினும், அவ்வையத்தையே பற்றி என் மனதில் எழுந்துள்ள ஐயம் ஒன்றிரண்டுள.

தனது முதற் சந்தேகத்தைக் கூறப்புகுங்கால் ஸ்ரீமான் இராமானுஜன் சிலப்பதிகாரத்தைப்பற்றிப் புகழ்ந்து பேசும்மொழிகள் தம்முளே முரண்பட்டு நிற்கின்றன. “இங்ஙனம் போற்றப்படற்குக் காரணம் அக்காலத்துள்ளவற்றை (சிலப்பதிகாரம்) மிகையுங் குறையுமின்றிக் கூறிச்செல்லும் நேர்மையாகும்” என்பர் அவர். சிறபோழ் தாயபின், அவரே “இச் சிலசிறு உண்மை விளக்கங்களேனும் பெற்றிலேமாயின் இருள்செறிந்த அக்கால நிலைமையை எவ்வாறு உணர்தல் கூடும்?” என்றுங் கூறுவர். பின்னதிலிருந்து, சிலப்பதிகாரக் காலம், நம்மைப் பற்றிய வரையில் இருள்செறிந்த காலம் என்பதும், அவ்விருளைச் சிறிதேனும் அகற்றுவது சிலப்பதிகாரம் என்பதும், அக்காப்பியம் இன்றெனின் இருள் செறிந்த அக்காலம், நமக்கு, இருள் செறிந்தே இருக்கும் என்பதும் போதருகின்றன. இவ்வாறாக சிலப்பதிகாரம் உரைப்பது “மிகையுங் குறையும் அற்றது” என எவ்வகையில் துணிதல் இயலும்! அந்நாள் இருந்தவெலாம் உண்மையில் எந்த நிலையில் இருந்தனவென்று நாம் வேறு வழிகளால் அறிந்திருந்தாலன்றோ, சிலப்பதிகாரம் உரைப்பது உண்மைக்கு மிகையுமில்லை குறையுமில்லை என்று உணர்ந்தவராவோம்.

மற்று, சிலப்பதிகாரம் அதன் காலத்துள்ளவற்றை மிகையுங் குறையுமின்றிக் கூறிச்செல்லும் நேர்மையே அதன் பெருமைக்குக் காரணம் என்ற முடிவிலிருந்து அவ்வாறு “பண்டைக்காலப் புலவர் பெருமக்கள்” “இயற்கை நெறிவழாது” நூல்கள் எழுதியதாலும், இடைக்காலத்தும், தற்காலத்தும் வாழ்ந்தவர்கள் அந்நெறி பிறழ்ந்து நின்றதாலுமே, முன்னையோரின் நூல்களைவிடப் பின்னையவர்தம் நூல்கள் பலபடி தாழ்ந்து நிற்பன” என்பர் ஸ்ரீமான் இராமானுஜன். “இயற்கை நெறி வழாது” என்பதன் பொருள் என்ன? பண்டைக் காலப் புலவர்பெருமக்கள் என்னுந் தொகுதியில் முக்கியமாக எவரெவரை ஸ்ரீ இராமனுஜன் வைக்கின்றார்? “இடைக்காலம்” என்பதன் துவக்கமும் முடிவும் யாவை? ஸ்ரீ இராமாநுஜன் கம்பனுக்கும்,புகழேந்திக்கும், சேக்கிழாருக்கும், தேவாரம்பாடிய பெரியாருக்கும், ஆண்டாளுக்கும், நம்மாழ்வாருக்கும், இராமலிங்க சுவாமிகளுக்கும் எக்காலத்தில் இடந்தருகிறார்? இடைக்காலம் எனின், இப்பாவலர்தம் நூல்கள், கவி

தாவன்மையைப் பற்றியவரையில், பண்டைய நூற்
களைக் காட்டிலும் எவ்வெப்படியில், தாழ்ந்துநிற்பன?
அன்றி, பண்டைக்காலப் புலவர்தம்மொடு இவர்க
ளைச் சேர்க்கலாம் எனின் சரித்திர ஆராய்ச்சி இடந்
தருமா? தருமெனினும், கம்பனது அயோத்தியும் *
சேக்கிழாரின் பொத்தப்பி நாடும், † உடுப்பூரும்,
ஆழ்வார்களும், சைவசமயக் குரவர்களும் பாடியுள்ள
தலங்களும், இயற்கை நெறி வழாது இயற்றப்பட்ட
புகைப் படங்களா?

பண்டைநாட் புலவரோ, அன்றி, பின்னுள் தோன்
றியவரோ யாவரே கவிதையிற் பெரியர் என்னுங்
கேள்வி புதியதொன் றன்று. இலக்கியம் படைத்த
ஒவ்வொரு மொழியிலும் தோன்றிப் பின்னர், பய
னற்றதென இக்கேள்வி ஒதுக்கப்படுகின்றது. பதி
னெட்டாம் நூற்றாண்டில், பிரான்ஸ் தேயத்திலிரு
ந்து முளைத்தெழுந்து, மேற்கு ஐரோப்பிய தேயங்கள்
முழுதும் படர்ந்து, பாயிலோ, ஸ்விப்ட், டெம்பில்,
போப், ஜான்ஸன் முதலான அறிஞர் பலரை வீணே
வருத்தி, இலக்கிய உலகில், பெருஞ் சமர் விளைத்
தது இக்கேள்வியே. ஸ்ரீமான் இராமானுஜனதுமொழி
கள் ஆங்கிலப்புலவன், சாம்யல் ஜான்ஸன் மொழி
களை என் நினைவிற்குக் கொணர்ந்தன. பண்டைய
புலவர்தம் இயற்கைநெறியைப் புகழ்வர் இராமா
னுஜன், நூற்றெழுபது வருடங்களுக்குமுன்னால்ஜான்
ஸனே, "பழைய புலவர், இயற்கையை அறிந்துள்ள
னர்; இவர்களைப் பின் பற்றியவர்கள் கலைத்தொழிற்
சாதனையைப் பெற்றிருக்கின்றனர்" * என்றனர்.
ஆனால் அங்கு, வர்ஜிலும், ஹோமரும் பண்டைய
நாளின் எடுத்துக் காட்டாக நிற்கலாயினர். இங்கு
இளங்கோவும், கூலவாணிகன் சாத்தனும் இவ்வ
கைக் குறி வைப்போர்க்கெல்லாம் இலக்காக இருக்க
நேர்கின்றது. உயிருள்ள இலக்கியத்தில், எக்கா
லத்தும் பெருங்கவிஞர் தோன்றுவர். இவர்களுள்
ஒருவருக்கொருவர் சற்றே ஏற்றந் தாழ்விருப்பினும்,
இவ்வேற்றமும் தாழ்வும், முறையே, பண்டைக்
காலத்திற்கும் அதனுடன் நின்ற இயற்கைநெறிக்கும்,
பிற்காலத்திற்கும் அது கைக்கொண்ட இயற்கை நெறி
வழுவுதலுக்குமே உரியன என்றுரைப்பது பொரு
த்த மன்று.

A. ஸ்ரீநிவாஸ ராகவன்.

* "கம்பனது அயோத்திமா நகர் ஓர் அழகிய கனவு"
என்ற என்கருத்தைக் கலாநிலயம் வெளியிட்டுள்ளது.
(I.43) ஸ்ரீமான் சேஷாசலம் ஐயர் அவர்களும், அவர்தம்
அருமையான ஆராய்ச்சிக் கட்டுரைகள் மூலமாக இம்முடி
வை எய்துகிறார்.

† கவிதா வுலகத்தில்மட்டுமே காணும் அழகைச் சேக்
கிழாரின் பொத்தப்பி நாடும், உடுப்பூரும் தாங்கியுள்ளன
என்பதனை ஸ்ரீமான் மீனாக்ஷிசுந்தரன் கலாநிலயத்தில்
விளக்கியிருக்கிறார்.

* "The early writers are in possession of
nature, and their followers, of art"
(Johnson's Rasselas chap. X)

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

10. மிதிலைக் காட்சிப் படலம்.

கோதமன் காதல னீறிலாத கூற்றினன்.

சனகன்பெற்ற அன்னத்தின் தன்மை இன்னதாக,
அன்னாளைக் கன்னிமாடத்தின்கண் மின்னர
சென்னும்படி நிற்கக்கண்டு, அவள்
156 பக்கத் தொடர்ச்சி
தன், உயிரும் உணர்வும் நாணும்
நிறையும் மெய்ந்நலனும் கண்வழி
நுழைந்து கவர்ந்துகொண்டு விலக்
குதற் கொருவரின்றி மண்வழி நடந்து அடி
வருந்தக் கோசிகமுனியொடு மறையப்போன அண்ண
லுக்குற்றதை மேலினிக் கம்பர் கூறுவாராயினர். எனி
னும் இராமனுக்கு உற்றதைச் சொல்லுமுன், நெடுஞ்
செய்யுள்கள் நாற்பத்தாறு இடைவந்து, அவ்விராமனை
அழைத்துச்சென்ற முனிவனுக்குத் தொல்லைநாள்
உற்றதையே சொல்லலாகின்றன. விச்வாமித்திரனது
சரித்திரமிங் கிவ்வண்ணம் விரிவாக வருவதன் கரு
மம் யாதெனக் காண்பதரிது. வான்மீகிமுனிவர்,
முதல்தொட்டு இதனை இறுதிகாறும் சதானந்தனைக்
கொண்டு இயம்பவைத்துளாராதலால் கம்பருக்கும்
அதுவே முறையாயிற்று என்று இயம்புதலமையு
மெனினும், காரணம்பற்றி இவர் முதனூலினின்று
விலகுவதுபோன்றே, காரணம் இன்றி அதனைத்
தொடர்வுந் தொடரார். வான்மீகத்தின்படி இராமன்
காதலுக்குத் தன் கருத்தெலா மத்தின மளித்திலனாத
லால் கோசிகன் கதைமுழுதும் சதானந்தர் கூறியதை
மனங்கொடுத்துக் கேட்பதற்கவன் ஒத்ததோர் நிலையி
னிலிருந்தனன். மற்றுக் கம்பர் நூலிலோ, இப்பொ
ழுது, தெருளிலா உலகினிற் சென்று நின்று வாழ்
பொருளெல்லாம், இராமனுக்குத் தனது உள்ளத்
தாமரையின் உள்ளுறைந்து இருகண்ணினுள்ளும்
கருத்துள்ளும் காண்கின்ற அவளது பொன்னுருவா
ய்த் தோன்றுகின்றன. இன்னநிலை யோர்இளவலை
இழுத்துவைத்து ஈறிலாக் காதையொன்றைக் கழறு
தல் அன்னான் பொறுமையைச் சாலச் சோதித்ததா
கும்.

வான்மீகி இராமாயணத்தில் கோதமன்புதல்வன்
கோசிகன் கதையைச் சொல்லப்புகுந்ததற்கு ஒரு
சிறிது காரணம் இருப்பதுபோல் தோன்றுகின்றது.
இராமனை யழைத்துவந்த கோசிகனைநோக்கி யங்குச்
சதானந்தர் தனதன்னையைப்பற்றிப் பலபட வினவுத
லும் அக்கோசிகன், "ஸங்கதா முநிநா பத்நீ பார்க்க
வேணேவ ரேணுகா" (ஜமதக்னியை இரேணுகை
அடைந்ததுபோலக் கோதம முனிவனோடு அவன்
மனைவி சேர்ந்தாள்) என்று கார்த்தவீர்யார்ச்சுனனைக்
கண் டொருசிறிது கருத்தழிந்த இரேணுகையை
உதாரணங்காட்டி அகலிகையின் செய்கையை அவள்
தனயனுக்கு நினைப்பூட்டினான். கோசிகன் இன்னபடி
கூறாது விட்டிருத்தலே தகவுடைத்தாம். இதனைக்
கேட்டு இங்கிதச் சொல்லிவன் ஏன் இயம்பினனெ
னச் சதானந்தர் மனஞ் சிறிது நொந்திருக்கும். பேச்
வதில் தான் மிக்க நிபுணனென்று விச்வாமித்திரன்

தன் அன்னையின் மனம் காமத்தால் தளர்ந்ததைக்
காட்டித் தந்ததற்கு எதிராக, "எனதன்னையும் சம
தக்னிமுனிவர்தம் மனையாளும் தையலார், நொய்மை
யர். காமம் புகுந்து அவர்களைக் கலக்கங்காணல் கழி
பெரும் பழியெனில், 'பிரம்ம பலம் திவ்யம்' என
எண்ணரும் தவமேற்பூண்டு யாவுந் துறந்துசென்ற
வொரு நோன்மையற்கும் காமத்தைக் கடப்பதற்கரிய
தாய பரிசு பகர்கின்றேன், கேள்" எனச் சதானந்தன்,
இக்கோசிகனது சரித்திரத்தைச் சாற்றியதாதலும்
அமையும். அரம்பையின் மேனிகண்டு அநங்கவேள்
சரங்கள்பாயத் தன்னுணர்வு அழிந்து காதற் கடலில்
அழுந்தி விச்வாமித்திரன் பலகாலம் உழன்றதைமாத்
திரஞ் சொன்னால் நேருக்குநேர் எதிரிடித்துரைத்த
தாகுமென அவனது சரிதம்யாவும் சதானந்தன்செப்
பியது நேரிதே. அதனோடு, கோசிகனது காமம்மாத்
திரமேயன்றிப் பேரவாக்குணமும் கோபத்தினளவுங்
கூடத்தோன்றும்.

கம்பரிற் பயில்தரும் அகலிகைமகனிற்கு இத்த
கைய நிபமும் இல்லை. கோசிகனும் இராம இலக்கு
மணர்களும் ஜனகனது மாடத்துவைகச் சதானந்தன்
அவர்பால்மேவித் தனதன்னையைப்பற்றி யாதொன்
றும் வினவாமல், "இப்போது நீ இவண்போத இப்
பூதலம் செய்த தவம் என்" என்று கோசிகனை உப
சரிக்கவும் நூல்தோய்ந்த சிந்தையம் முனிவன்,

வடித்த மாதவ கேட்டியிவ் வள்ளறான்
இடித்த வெங்குரற் றடகை யாக்கையும்
அடுத்தென் வேள்வியு நின்னன்னை சாபமும்
முடித்தென் னெஞ்சத் திடர்முடித் தானென்றான்.

[தெளிவுறப் பெருந்தவங்கள் செய்தன சதானந்தனே,
கேள், இந்தப் பெருமகன்தான், இடிப்பதுபோன்ற கொடிய
குரலையுடைய தாடகையின் உடலை அழித்தும், அடுத்திருக்
கின்ற என்யாகத்தை நிறைவேற்றியும், உன் அன்னை அக
லிகையின் சாபத்தைத் தீர்த்தும் முடித்து, என்னுடைய
நெஞ்சத்தில் இருந்த கவலையையும் நீக்கினான்]

என்றனன். கௌதமர்பால், "நெஞ்சினால் பிழைப்
பிலாதாளை நீ அழைத்திடுக" என்று அகலிகையைச்
சேர்ப்பித்ததுபோன்றே கோசிகன் இங்கு அவளை
அவள் மைந்தனிடம் இரேணுகையோடு ஒப்புக் கூட்டி
உரைக்க ஒண்ணாது என்னும் நேர்மையைத் தேர்ந்து,
அவள் சாபம்நீங்கின ளென்பது சதானந்தனுக்கு நற்
செய்தியாகுமாதலால் அதுவரையில் இயம்பினின்
றான். எனவே, கோசிகன்தன் காமத்தை எடுத்தெதி
ருரைக்கும் நோக்கம் சதானந்தனுக்குக் கம்பராமய
ணத்தி லிலதாயிற்று. நோக்க மின்றெனினும் இப்
பெருங்கதையைச் சதானந்தன் இராமனுக்கிங்கு விரி
வாக விளம்புவது உலக அநுபவத்திற்கு ஒக்க முடிந்
துளதென ஒருவகையில் உரைக்கலாம். பொழுது
போக வழியின்றி வெற்று மனமாய் வைகுங்காலையில்
உரையாடற் கொருவரும் நேராராக, நம் மனமுழு
தும் வேறொரெண்ணங் குடிகொண்டிருந்து அதனை
நாம் தனிமையிற்றழுவி யுன்னுதற்கு விழைகின்ற
செவ்வியில் உரைவளரும் வாயினர்சிலர் ஓயாதநெடுங்
கதைகள் உறவுறச் சொல்லலாம் விதியின் சோதனை
விளைகின்றது. யாவருக்கும் நேரத்தகுந்த அக்கதி
யிராமனுக்கும் இன்று நேர்ந்தது போலும். விச்வாமித்
திரன் அன்று வருந்திவருந்திச் செய்த தவமெலாம்
இன்று இராமன் முயன்று கேட்கலாயிற்று. கோசிகன்
முன் ஈறிலாத் தவங்கள் செய்தான்; அதனை இன்றிக்
காதலன் ஈறிலாது கேட்டு நைந்தான். இராமனது
முகத்தில் சிறிதேனும் ஆர்வக்குறி தோன்றியிருக்கு
மென்றுநினைப்பதற்கில்லை. கேட்பவர் உற்சாகத்துடன்
கேட்குங் காலையிற்றான் கூறுவோர்க்கும் உற்சாகம்
பிறந்து அவருடைய சொற்களும் சுவைநனி பெறு
கின்றன. சதானந்தர் கூற்றுகவமைந்த இவ்விச்வா
மித்திரனது பிரதாபச் செய்யுள்கள் நாற்பத்தாறிலும்
சொல்லினது அழகினுதல், பொருளின் ஆழத்தினு
தல், இசையின் இன்பத்தினுதல் சிறப்புற்று விளங்கு
கின்ற செய்யுள் ஒன்றேனும் உளதென்றியம்புத லரி
தாயிருக்கின்றது. இன்னதற்குக் காரணம் சதானந்
தருக்குச் சொல்வன்மை இன்மையன்று. கேட்டிருக்த
இராமன் முகத்தில் கிளர்ச்சியொன்றுந் தோன்றாதி
ருந்ததே ஆதல் வேண்டும். அவ னென்செய்வான்
பாவம். உள்ளமெல்லாம் ஒருத்தியின்பால் துறந்து
நின்ற ஒட்டை மனத்தோடு உயிர் தாங்குதலே அரி
தாயிருக்க, வோர் ஆவின்பொருட்டு அரசுநீங்கி
அலச நோற்றவன் சரிதைக்குச் செவிதானளித்திடி
னும் அவன் சிந்தனை செல்வது எங்ஙனம்.! ஆதலால்

ஈது முன்னர் நிகழ்ந்த திவன்றனை
மாத வத்துயர் மாண்புடை யாரிலை
நீதி வித்தகன் றன்னரு ளோர்ந்தனிர்
யாது மக்கரி தென்றன னீறிலான்.

189044.

[இவ்விச்வாமித்திரனது சரித்திரத்தில் மூன் நிகழ்ந்துள்
ளன இவை. இவனுக்குச் சமானமாகப் பெரிய தவங்களாற்
சிறந்தவர் வேறு இலர். நீதியிற்சிறந்த இம்மேன்மை
யோனுடைய அருளைப் பெற்றீர். இனி உங்களுக்கு அரிய
தென்பது ஒன்றுமில்லை," என்றான் ஈறு இல்லான்]

என முடித்தகம்பர் நாடகவுணர்ச்சி பெரிதும் உடைய
ராதலால் 'ஈறிலான்' என்னுஞ்சொல்லால் 'ஓயாதவன்'
என்ற பொருளில் இராமனைவே சதானந்தரைக்
குறித்தார் போலும். இதுகொண்டு நோக்குங்கால்,

" என்று கோதமன் காதலன் கூறிட
வென்றி வீரர் வியப்பொ டுவந்தெழா"

எனத் தொடர்கின்ற செய்யுளில், 'வீரர்' என்பதைக்
காட்டிலும் 'வீரன்' என்றிருப்பதே சிறந்த பாடமா
கின்றது. ஆயின், வீரனாகிய இராமன், " தன்னையிவ்
வாறு துன்புறுத்திய வெங்கண் விதியின் விளை
யாட்டை வியந்தும், இவ்வோயாத கதையும் ஓய்ந்ததே
என உவந்தும்", எழுந்தான் என்பது பொருளாம்.

வியப்பொடு உவந்தெழுந்த இராகவன் சதானந்த
ரைத் தாள்தொழுது அனுப்பியபின் கோசிகனும்
இலக்குவனுந் தத்தமக்குரிய பள்ளிகள் எய்தினர்.
எய்த,

இருள்
கனியும் போல்பவன் கங்குலுந் திங்களுந்
தனியுந் தானுமத் தையலு மாயினன்.

[இருள்முற்றிக் கனிந்ததுபோன்ற மேனியை உடைய
இராமன் இரவும் சந்திரனும் தானும் அந்தத் தையலும்
தனியும் ஆயினன்]

தம்மனதிற் கினியாரைக் கூடாக்காலையில் காதலார்
வேண்டுவது தனிமையே. இரவுண்டு சந்திரனுண்டு
தனிமையுண்டு தானும் உண்டு, என்றிருந்தான்முன்
னர்ச் சீதையின் உருவெளித்தோற்றம் வந்து தோன்
றியது. அதனை உன்னிக் கூறுவான்,

விண்ணி னீங்கிய மின்னுரு விம்முறை
பெண்ணி னன்னலம் பெற்றதுண் டேகொலோ

எண்ணி னீதல தென்றறி யேனிரு
கண்ணி னுள்ளுங் கருத்துள்ளுங் காண்பெனல்.

[ஆகாயத்திலிருந்து பிரிந்த மின்னலின் உருவானது இந்தப்படி பெண்ணின் நல்ல அழகைப் பெறுவதுங் கூடுமோ. பெண்ணழகு பெற்ற அம்மின்னல் உருவத்தை இரு கண்ணினுள்ளும் என் கருத்தினுள்ளும் காண்கின்றேன். ஆனல் இது கண்ணிற்காணும் உருவம், அல்லது இது கருத்தில் உன்னும் உருவம்என்று வேறுவேருக உணர இயலாதவனுயிருக்கின்றேன்]

உள்ளிருந்து உதிக்கின்ற நினைவிற்கும் வெளிவந்து உலவுகின்ற உருவிற்கும் வேறுபா டுணராததற்குத் தக்க காரணம்,

அருளி லாளெனி னும்மனத் தாசையால்
வெருளு நோய்விடக் கண்ணின் விழுங்கலால்
தெருளி லாவுல கிற்சென்று நின்றுவாழ்
பொருளெ லாமவள் பொன்னுரு வானவே.

[அவள் என்பால் அருளில்லாதவ ளானுலும் நான் என் மனதின் ஆசையால் வெருட்டுகின்ற காமநோய் விடும்படி மருந்தாக அவளைநான் என் கண்களால்விழுங்கியிருப்பதால், தெளிவற்ற இவ்வுலகிலுள்ள சராசரப்பொருள்கள் அனைத்தும் எனக்கு அவளது அழகிய உருவாகவே தோன்றலாயின] என இராமனே கூறுகின்றனன். தாயுமானசுவாமிகள் "கண்டனவெலா மோன உருவெளிய தாகவுங் கருதி அஞ்சலி செய்வதை" த்தான் இராமன் இங்குக் காதலுக்குரியாளைக் குறித்துச் சொல்லலாயினன். கடவுளில் தன்னைத் துறந்தோரே அக்கடவுளைத் தன்னுள் பெற்றவராகின்றனர். பெற்றவுடன் தன்னுளே மாத்திரம் அக்கடவுளை உணர்வதல்லாது சராசரங்களனைத்தையும் அக்கடவுளேயாய்த் தரிசிக்கின்றனர். இராமன் சீதையைத் தன் கண்களால் விழுங்கியதோடமையாது தானும் மாறிப்புக்கு அவளிதயம் எய்தி இருத்தலாற்றுன் பொருளெலாம் அவள் பொன்னுருவாயின. மெய்க்காதலும் கடவுளின் மெய்ம்மையும் ஒரே தன்மைய தத்துவத்தில் அடங்கியவை. 'அருளிலாள்' என்று இராமன் இங்குச் சீதையை நோவதன் காரணந் தெரிந்ததில்லை. அருளிருந்து அவள் யாது செய்வதென எண்ணினன், இராமன் "இனியேதெனக்கு உன்னருள் வருமோ வெனக்கருதி" ஏங்கிய அத்தாயுமானவரேபோல் இராமனும் தன்காதல் காரிகையை 'அருளிலாள்' என அழைக்க நேர்ந்ததெனினும், இவ்விருவரும் அச்சொற்களைக் கூறிய கருத்தில் ஓரளவு வேறுபா டுண்டென்பதற் கையமில்லை. தன்முயற்சி எத்துணைப் பெரியதேயாயினும் அவன் கருணையின்றி உய்வதென்பது இயலாதெனும் கொள்கையாற் கூறினர் தாயுமானவர். ஆசைப்பெருக்கினல் பொருளிலா உரைசில பயிலும் காதலர்பான்மையில் இராமன் பகர்ந்த திது. காதலியரை வன்கண்வனிதையர் எனக் கவன்றிரங்குவது ஆங்கிலக் காவியங்களிலும் மரபாயிருப்பதைக் காணலாம். அது, தம் காதலை எதிருறக் கொடுத்தலு மறுத்தலுமின்றிக் கடுவச்சையர்போல் கரவேபுரியும் காரிகையார் வழக்கினைத் தழுவிவந்துளது. தான் இருந்தவிடந் தேடிவந்து அவள் தன்னை அளித்திலள் என்று இராமன் கொந்தனனோ யாதோ. காமத்தின் மாறுட்டத்தால் சிலர் நகைப்பிற்கிடமாய இவையனைய செயல்களைத் தம் காதலர்மாட்டுக் கருதி வேண்டுவர்போலும். இராமன் சீதைக்கு அருளில்லை என்று ஏசினனென்றால் சீதையும் மறுநாள்,

பஞ்சரங்கு தீயினுவி பற்றநீடு கொற்றவில்
வெஞ்சரங்க ளெஞ்சரங்க வெய்யகாம னெய்யவே
சஞ்சலங் கலந்தபோது தையலாரை யுய்யவந்
தஞ்சலஞ்ச லென்கிலாத வாண்மையென்ன வாண்
[மையோ

[கொடிய மன்மதன் தன் நீண்ட வெற்றிவில்லால் என் நெஞ்சு அழியும்படி, பஞ்சை அழிக்கும் தீயைப்போல் என் ஆவியைப் பற்ற வெவ்வியபாணங்களை எய்ய, அதனுல்துன்பம் மிகுந்தபோது மாதரை உய்யவந்து அஞ்சல் அஞ்சல் என்று அபயம் அளிக்காத ஆண்மை என்ன ஆண்மையோ] என இராமனுக்கு ஆண்மை யில்லையென்று ஏசுவாள் தன்னைக் கன்னிமாடத்தில் தேடிவந்து இராமன் அபயம் அளிக்கவேண்டுமென்று உண்மையாக எண்ணினளோ இவள். உண்மையாதெனில் கைக்கிளையில் பொருளுடைய உரைகள்தாம் பயிலவேண்டு மெனும் நியதிஇல்லை உரைசில இவ்வண்ணம் உரைப்பானுலும் இராகவன் உடலம் நைகின்றுன். நைந்து மெலிகின்ற இவனுக்குக்

கன்ன லின்கருப் புச்சிலை யான்விரைப்
பொன்னை முன்னிய பூங்கணை மாரியால்
என்னை யெய்து தொலைக்குமென் றுலினி
வன்மை யென்னுமி தாரிடை வைகுமோ.

என்ற வியப்பு விளைந்தது. 'நானுமே தொலைந்தேன்' என்று தோல்வியை ஒப்புக்கொள்கின்றுனே, அல்லது "எய்கின்றுனெனினும் என்னையும் தொலைக்க மன்மதனுல் ஆகாது" என்று தனது திட்பத்தைத் தெளிவுறுத்தித் தன்னையே தேற்றிக்கொள்கின்றுனே என்று நிச்சயமாய் உணர இயலாதபடி இச்செய்யுள் இவ்விரு பொருள்களுக்கும் ஒக்க நிகழ்கின்றது. எனினும், இத்தகைய நிலையில் 'தோற்றேன்' என்பதும், 'என்னைத் தோல்விகாண இயலாது' என்பதும் இரண்டும் அந்தத்தில் ஒரே குறிப்பின. வலியழிந்து வருதலை உணர்ந்ததாற்றுன் 'தோற்றே போவேனே' என்னுமச்சம் அவன் மனதைப் பற்றியுழக்க அதன் காரணமாக அவன் வாய் இவ்வார்த்தைகளை உரைத்து அவனைத் தேற்ற முயல்கின்ற செய்தியாம் இது. இராவணனும் சீதையினழகைச் சூர்ப்பணகையால் கேட்டே சிதைந்திருந்த நிலையில் பிறைச்சந்திரனைக் குறித்து,

என்னைச்சுடுமென் னினிவ்வேழுலகத்தும் வாழ்வோர்
பின்னைச் சிலருப் வரென்றங்கொரு பேச்சுமுண்டோ
என்று வியக்கும்வாயிலாகத் தன் இறுமாப் பொடுங்கினன். சோதித்தற்குரிய அற்றமும் செவ்வியும் நேராதவரையில் யாவரும் தத்தம் ஆற்றலுந் திட்பமும் ஒருதனித் தன்மைபதென்றே எண்ணியிருப்பர்.

இராமன் தன் மெய்வலி அழிந்தானென்றேனும் அயிர்த்தானென்றேனும் கொள்ளலாம். மற்று அவன் தன் மனத்தின்பால் வைத்திருந்த நம்பிக்கையில் சிறிதேனுந் தளர்ந்திலன்.

ஏகு நல்வழி யல்வழி யென்மனம்
ஆகு மோவதற் காகிய காரணம்
பாகு மோன்மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும் வேறிதற் கையுற வில்லையே.

என்று வேறொரு சான்றுமில்லாவிடத்தும், அன்னம் மாடும் முன்துறையில் அன்று கண்ட தையலாள் தன் காதலை நெறிவழுவாமுறையில் அளித்தற்கும் பெறுதற்கும் ஏற்றவோர் கன்னியே என்று மனச்சான்றேயாதாரமாக முடிவுகொள்கின்றுன். நெஞ்சத்தால் சான்றோன் தான் என்று தளராது தயங்காது உண்மையாய் உரைக்கவல்ல மேன்மகன் இராகவன் ஆதலால் அவன்யாவரையும் இரமிக்கச்செய்பவனுயினன்.

பதினெட்டாம் பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும், எழுதவும் ஆரம்பித்துவிடலாம். இந்தப்பாஷையில் வியாபாரரகசியங்களைக் குறித்துக்கொண்டால் பிறர் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் கணவர்களுடன் குடும்பரகசியத்தைப் பேசினுல் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக்கேட்டுப் பிறரிடம் சொல்லிக் கோள்மூட்ட முடியாது. இது ஓர் அபூர்வ தமிழ்ப்பாஷை சொல்பகாபிகளே இருக்கின்றன. மூந்துங்கள். விலை அணு 8.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரைத் தமிழில் வெளிவந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றிச் சகல மதஸ்தர்களையும் களிக்கச்செய்யும் வியாஸங்களைப் பிறஇமாத சஞ்சிகையிலும் காணலாம். மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்தபின் பிறர் சிபார்சு இல்லாமல் நீங்களே வாங்குவீர்களென்பது நிச்சயம். பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூபா 1—4—0. மாதிரி காபி இனும்.

10-ம் பதிப்பு] **ஆங்கில ஆசான்** [வந்துவிட்டது

[எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.]

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியவிதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைவீதி, மதராஸ்.

கம்பராமாயணம், பாலகாண்டம்.

புதியதோர் வகையினதான ஸ்ரீமான் T. N. சேஷாசலமையர் பதிப்பு. செய்யுள்களுக்குப் பதவுரை கூறுது, பதம் பிரித்தும் தொகை விரித்தும், அன்வயப்படுத்தியும் படிப்பவர் தாமே முயன்று பொருள் தேடுமாறு ஆக்கப்பட்டுளது. கடினமான பதங்களுக்கு உரை சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூ. 3-0-0. தபால் செலவு வேறு.

ஏமாங்கதத்திளவரசன்.

T. N. சேஷாசலம் ஐயர் இயற்றிய நூல். இலக்கிய நலங்கள் யாவும் துலங்குமோர் காதற்கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்து செய்யும் துன்மதிச் சூழ்ச்சியும், வீரனொருவன் மண்மோகமும், இக்கதையை நிகழ்த்திவைக்கும் பெருமையைப் படிப்பவரே அறிவர். விலை ரூ. 1-0-0.
தபால் செலவு வேறு.

கந்தபுராண வெண்பா

வெண்பாப் புலி என்ற புகழ்தாங்கிய ஸ்ரீ தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றியநூல் இது. 6-காண்டங்களும், 5665 செய்யுள்களும் கொண்டது. ஓதுதற்கினிய நேரிசை வெண்பாக்களால் ஆயது. கற்றோர் இதயம் களிக்கச் செய்யவல்லது. விலை ரூ. 4-8-0.
தபால் செலவு வேறு.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கட்டரமணி M.A., B.L. ஆங்கிலத்தில் செய்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி மொழி பெயர்ப்பாசிரியர். இக்கதையின் அமைப்பும், சொல்லும் வகையும், எளிய நடையும், படிப்பவர்க்குக் களிப்பைத் தரவல்லன. விலை ரூ. 1—8—0.
தபால் செலவு வேறு.

கலா நிலயம், வெள்ளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

Our Publications.

Kamban's Kosala.

By T. N. Seshachalam, A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville** and **Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book. Price Rs. 1-8-0.

மேனுட்டுப்பேரறிஞர் நால்வர்.
கார்லைல், எமர்ஸன், ரஸ்கின் டால்ஸ்டாய், இவர் தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்
கம்பன், காளிதாசன், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங்கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதிசயம். விலை அணு 4.

விசித்திர விளக்கு
எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

The Educational Publishing Co., *Nungambakam, Madras.*

இந்தியாவிலும் பர்மாவிலும்

எங்கள்

தங்கக்கலன்களும் வெள்ளிக்கலன்களும்

உபயோகத்தோடு சுத்தமும் அழகும்
சேர்ந்திருக்குந் தரத்தினை அனைவரும் அறிவர்.

சுத்தம்

சுத்த வெள்ளியும் சவரன் பொன்னுமே உபயோகப் படுத்துகின்றோம். உலோகத்தின் சுத்தத்திற்கு அடையாளமாக நாங்கள் செய்த சாமான்களின்மேல் டையமண்ட் டிரேட் மார்க் காணப்படும்.

அழகு

எமது மாதிரிகள் புதியன. கண்ணைக் கவரும் அழகுடையன. எங்களுக்கே பிரத்தியேகமான இவை, நவத்திலும் நவமான நாகரிகமுடைய வெள்ளி வேலைகளின் அழகையும் பெருமையையும் அமையப் பெற்றிருக்கின்றன.

உபயோகம்

சுத்த வெள்ளிச் சாமான்களையே வாங்குவதன் இலாபம் எவருக்கும் தெரியும். வாங்கும் விலையையும், எத்தனைவருஷம் அந்தச்சாமானின் அழகு அழியாம லிருக்குமென்பதையும் வகுத்துப் பார்த்தால், "சிறந்த சாமான்களே மலிந்த சாமான்களுமாகும்'' என்னும் பழமொழி பழுதாகாததை யறிவீர்.

குடும்பத்து வெள்ளிச் சாமான்கள் யாவராலும் மனங்கனிந்து பாராட்டப்படுவன. அவைகளைக் காணுந்தோறும் முன்னை நினைவுகள் பல ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்வது இயற்கையே. தலைமுறை தலைமுறையாய் இவைகளையும் இவைகளை வாங்கிவைத்த உங்களையும் கொண்டாடுவார்.

வாங்கி நீங்கள் வைத்து மகிழ்வதற்கும் நன்கொடை அளித்து மகிழ்விப்பதற்கும் உரிய எங்கள் வெள்ளிக்கலன்களை மனமுவந்து காட்டுகின்றோம், வாருங்கள்.

வெகுமதியளிக்க

வெள்ளிக் கலன்கள் உபயோகத்தாலும் அழகாலும் தனக்குச் சமானமில்லாத் தனிப்பெருஞ் சிறப்பாலும் அழியாத் தன்மையாலும் மிகப் பொருத்தமானவை

கப் காஸ்கெட் தட்டு, அல்லது ஸெட்டாகச் சேர்ந்த சாமான்கள் எங்களிடத்தில் தயாராக இருக்கின்றன. இவைகளிலிருந்து வாங்கிக்கொண்டாலும் சரி, இஷ்டமான மாதிரிப்படி எங்களிடம் செய்வித்துக்கொண்டாலும் சரி-பெற்றுக்கொள்பவர் தம்பொருட்டுக் கவனம் செலுத்தித் தேர்ந்தெடுத்திருக்கின்றீர்கள் என்று உங்களை மிகவும் பாராட்டுவர்.

அளவற்ற சாமான்கள் எங்களிடத்தில் செய்து தயாராயிருக்கின்றபடியால் நீங்கள் வேண்டியதைத் தேர்ந்துகொள்வது வெகு சுலபம். நாங்களும் உங்கள் தேவைக்குத்தக்கபடி எடுத்துத் தருவோம்.

எங்கள் கொள்கை

யோக்கியமாகவும் கவுரவமாகவும் நாங்கள் சரிவரச்செய்து விர்த்தி யடைகின்ற வைர வியாபாரத்தைப்போலவே இந்த வெள்ளிச் சாமான் டிபார்ட் மெண்டையும் நடத்தி வருகின்றோம். ஒருமுறை எங்களிடம் வெள்ளி பொன் கலன்கள் வாங்குபவர் பொருள்களின் தூய்மையையும் அழகையும் கண்டு பின் எங்களிடமே செல்வர்.

எங்கள் எஸ்டிமேட்

எந்தச் சாமான் எந்த மாதிரியில் வேண்டுமானாலும் கேளுங்கள். டிஸைன்களும் எஸ்டிமேட்டும் அனுப்புவோம்.

உங்கள் ஆதரவை வேண்டுகின்ற

ஸுராஜ்மல் லல்லுபாய் & கோ.,

135, பெரிய பஜார் திரிச்சிராப்பள்ளி. | வைர வியாபாரிகள், நகைகட்டுவோர் பொன்வெள்ளிக் கலன்கள் செய்பவர். | 313, எஸ்பளனேட், சென்னை.

SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS,
GOLD AND SILVER SMITHS.

135, Big Bazaar, TRICHY. | 313, Esplanade, MADRAS.

வர்த்தமானம்.

ஆப்கன் புரட்சி:—பெஷாவரிலிருந்து வந்த செய்தி கூறுவதாவது:—கலகம் செய்த காபூல்வாசிகளைத் தான் மன்னித்து விடுவதாகவும், ஏற்கனவே அவர்கள் கலகக்காரனுடன் சேராது விலகல் நலம் என்றும், ஐட்விழாவிற்குப் பிறகு காபூலைத் தாக்கப் போவதாகவும், அமனுல்லாவிடமிருந்து வந்ததாக நோடீஸுகள் மார்க்கெட்டுகளிலும் மசூதிகளிலும், கடைத் தெருக்களிலும் ஒட்டப்பட்டுள்ளன. புதிய அமீர் காபூலில் சைனியம் சேர்த்து வருகின்றனர்.

காபூலில் வேலைபார்த்துவந்த ஜெர்மனியர்களும் மற்ற ஐரோப்பியர்களும் பாச்சா சாக்கோவால் வேலையினின்று நீக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

***

சட்டக்கல்லூரி மாணவர்நிலை:—சென்னைச்சட்டக் கல்லூரி மாணவர்களில் மூவர் சைமன்கமிஷன் சென்னைக்குவந்தவன்று, பகிஷ்காரத்தில் சேர்ந்துகொண்டு கல்லூரிக்கு வராதிருந்தனர் என்று சென்றவாரம் செவ்வாய்க்கிழமை கல்லூரித்தலைவர் அவர்களைக் கல்லூரியினின்று நீங்குமாறு கூறினர். மாலையில் மாணவர் கூட்டமொன்று கூடிற்று. அதில் மந்திரியைப் பார்ப்பது என்றும் பின்னர் ஏற்படும் நிலைமையைப் பற்றிக் கூட்டம்போட்டு யோசிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீமான் டி. பிரகாசம் பகிஷ்கரித்த மூவரும் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்படுமாறு காரியம் செய்யப்படவேண்டுமென்று கூறினார்.

***

காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம்:—சென்றவாரம் டில்லியில் அகில இந்தியக் காரியக் கமிட்டியின் கூட்டம் ஒன்று கூடியது. காந்திஅடிகள் பண்டிதர் நேரு, பண்டிதர் மாளவியா, மௌலானா அப்துல் கலாம் அஸாத், டாக்டர் அன்ஸாரி, சர்தார் சாதுசிங், ஜிவஹறிலால் நேரு, ஆயவர் கூட்டத்திற்கு வந்திருந்தனர். அக்கூட்டத்தில் செய்த தீர்மானங்கள் வருமாறு:—

மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளின் வரவு செலவுகளைப் பரிசோதனை செய்யும்பொருட்டு ஆடிட்டர் ஒருவரை நியமித்தல்.

எல்லா மாகாணங்களிலும் காங்கிரஸில் சேர்ந்தவர்களிலிருந்து தொண்டர்களைச் சேர்த்து, அவர்களை வீடுதோறும் சென்று ஜனங்களினிடம் அன்னியத் துணிகளைப் பகிஷ்கரிக்கச்செய்யும் வேலைக்கு அனுப்புதல்.

எல்லாக் கட்சியாரையும் கொண்ட டில்லி மஹாநாட்டிலும், கல்கத்தா காங்கிரஸிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுயராஜ்யத்திட்டத்தை ஜனங்களிடம் பரப்புவதற்குப் பிரசாரம் செய்தல்.

காங்கிரஸ் திட்டத்தையொட்டி வேலை செய்வதற்கென்று சேர்க்கப்படும் தொண்டர்களுக்குப் போதிய பயிர்ச்சி செய்விக்கும்பொருட்டு ஹிந்துஸ்தான் ஸேவாதளத்திற்கு 20000 ரூபாய் கொடுத்தல்.

வேறுபலதீர்மானங்களும் செய்யப்பட்டன. ஸ்ரீமான் C. S. அரங்கையர், காங்கிரஸ் கட்சியின் வரம்பு மீறிக் காரியம்செய்தாரென்றும், அவர் தலைவரை இழிவு செய்தாரென்றும் கண்டித்து, அவர் சட்டசபை ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்யவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

***

சைமன் விசாரணை:—சைமன் கமிஷனர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர். லேபர்கமிஷனர் தொழிலாளர்களுக்கெனத் தனிப் பிரதிநிதித்வம் கொடுத்தல் தேவையில்லை என்றம், ஓட்டுரிமையை இன்னும் அதிகமானவர்கள் பெற்றால் போதுமென்றும் கூறினர்; போலீஸ்இலாக்கா தலைமைஉத்தியோகஸ்தரான மிஸ்டர் ஹாமில்டனும், சென்னைப் போலீஸ் கமிஷனரான மிஸ்டர் கன்னிங்காமும் விசாரிக்கப்பட்டனர். ரிசர்வ் இலாக்கா முழுதையும் மந்திரிகளிடம் அளிப்பது கமிஷனின் அபிப்பிராயமாயின் போலீசையும் அவர்களிடமே கொடுத்து விடலாம் என்று இருவரும் கூறினர். ஸ்ரீமான் நடேச முதலியார் பிராமணரல்லாதாருக்குத் தனிப் பிரதிநிதித்துவம் வேண்டுமெனக் கூறினர். ஐரோப்பிய வர்த்தகச் சங்கத்தின் பிரதிநிதிகளும் விசாரிக்கப்பட்டனர்.

***

தென்னாட்டில் ஹிந்தி பிரசாரம்:—கும்பகோணம் சங்கராச்சாரியாரைத் தென்னாட்டில் ஹிந்திபிரசாரம் செய்துவரும் ஜமன்லால் பஜாவின் குமாரர் திருச்சியில் பார்க்க, அவர் ஹிந்தி பிரசாரத்திற்கென ரூ 100 கொடுத்தனராம்.

***

ஆனந்தபோதினி:—சென்ற பலவாண்டுகளாக மாத சஞ்சிகையாய் நிலவிய "ஆனந்தபோதினி'' இம்மாச 20வ முதல் வாரவெளியீடாகவும் வர ஆரம்பித்திருக்கின்றது. அம் முதல்இதழைக் காணப்பெற்றோம். அதன் தலையங்கத்திலிருந்து, அது அரசியல் கட்சிவாதங்களில் தலையிடாமல், "மக்கள் ஒழுக்கவழக்கச் சீர்திருத்தத்திலும்,'' தமிழின் வளர்ச்சியிலுமே முயலும் நோக்கத்தையுடைய தாயிருக்கின்றதென அறியப்பெரிதும் மகிழ்கின்றோம். இப்பத்திரிகை வர்த்தமானங்களைப் பிரசுரஞ் செய்வதுடன், பயனுடைய கட்டுரைகளும் தந்துதவும். "நம் தற்காலக் கல்வியின் குறைகள்'' என்று ஸ்ரீமான் ஸ். சிவாரமன் பி. எ. எல். டி. எழுதியிருக்கும் விஷயங்கள் யாவருங் கருதத்தக்கன. சாமி சிதம்பரனார் என்பவர் திருக்குறள் விளக்கம் இப்பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதி வருவாரெனக் காண்கின்றது. "நாமும் மனிதர்களா?'' என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீமான் கி. ஆ பெ. விசுவநாத பிள்ளை எழுதியுள்ள விஷயங்களில், வீணாகச் சிலரைப் பழிக்கின்ற பாகங்களைத்தவிர மற்றப்பாகங்கள் சிந்தித்தற் கொத்தன.

இதன் ஆசிரியர். ஸ்ரீமான். N. முனுசாமி முதலியார். வருடசந்தா உள்நாடு ரூ 3-0-0. வெளிநாடு ரூ 4-0-0. விலாசம். போஸ்ட்பாக்ஸ் No. 167. சென்னை.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

கலா நிலயம்

1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும் பைண்ட் செய்தும் செய்யாமலும் எங்களிடம் கிடைக்கும்.

அதனிலடங்கிய முக்கியமாயகட்டுரைகள் தொடர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும்திருக்கண்ணப்பரும், கம்பராமாயணம். தமிழ்ப்பாடம், அகப்பொருள் வரலாறு, காந்திமதியென்னும் செந்தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், இவைதவிர கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழிபெயர்ப்பு. இன்னும்பல விஷய விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ உள்பட:—

பைண்ட் செய்யாதது
உள்நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளிநாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்ட் பைண்ட்,
உள்நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளிநாட்டிற்கு ரூ. 12-8-0.

புல் காலிகோ கில்ட் பைண்ட்,
உள்நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளிநாட்டிற்கு ரூ. 12-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப்பிக் கேட்கவும்.

மானேஜர்,
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள் ! வியாஸங்கள்! !

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம	0	2
பலவகை மனிதர்	0	1	ஆறுதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனாம்.

இன்றே எழுதுங்கள் !

நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

189044

N28140
'24

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"
11, VELLALA STREET.
Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E, Kumariah, B.A., B.L. (Editor)